# BELOVED SON OF KARAMPON




MR. S.A.E.RATNARAJAH MEMORIAL SOUVENIR

# கரம்பொன் மண்ணின் தவப்புதல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BELOVED SON OF KARAMPON

A
MEMORIAL SOUVENIR
FOR

*Late Mr. S. A. E. Ratnarajah*

# காரம்பொன் மண்ணின் தவப்புதல்வன்

## ~ நினைவு மலர் ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...


கண்ணீர் அஞ்சலி----- 01
யாழ் ஆயரின் இரங்கற் செய்தி 05
Message from the Bishop of Trinco - Batticaloa 06
Message from the Bishop Emeritus of Trinco Batticaloa 07
குருமுதல்வரின் அனுதாபச் செய்தி 08
Tribute from Fr.T.A.J. Mathuranayagam 09
An Appreciation from the Dean of Jaffna 10
புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின் இரங்கற் செய்தி 11
Message from Parish Priest and Rector, St Antony's 12
Message from Rev. Fr. R.X Sahayanayagam 13
Message from Rev. Fr.M.E Pius 14
சத்தியத்திற்கு சாட்சியம்... - அருள்திரு குணசீலன் 15
இவரின் வெற்றிடம்....... - அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை 17
மக்கள் தொண்டாற்றிய மாமனிதர் - உதவி அரசாங்க அதிபர் 20
அதிர்ந்த அந்த நாட்கள் - அருள்திரு சா.பி. கிருபானந்தன் 21
அளப்பெரிய ஆளுமைத் திறமை கொண்டவர் 23
ஊருக்கு உயிர் கொடுத்த...... - அருள்திரு B.F. பொனிபஸ் 24
மண்பற்று மிக்க மதிநுட்பம் நிறைந்த சேவையாளன் 25
ஆசிரிய உலகில் எனது முதல் அதிபர் 26
பணியில் நிறைந்த உத்தமர் 28
காவலூரின் முன்னோடித் தவப்புதல்வர். 29
Message From OBA UK 30
Message From OBA Canada 31
ப. மா. ச. தென் இலங்கைக் கிளை அனுதாபச் செய்தி 32
இறுதி வரை மண்ணை நேசித்தவர் 33
Tribute From Karampon Parishioners of Canada 34
கரம்பொன் பங்கு மக்களின் அஞ்சலி 36
An Inestimable Treasure 37
Tribute From Former Staff - Victor Phillip 39
பிறந்த மண்ணை நேசித்த கனவான் 40
A Well Respected and Dedicated Person 42
A Heartfelt Farewell 43
ஈடுசெய்ய முடியாத இழப்பு 44
He was Lord's Work of Art 45
உவப்பத்தலைக் கூடி 46
Tribute From Former Teacher - J.M. Ferdinand 49
The Ratnarajah Epoch 50
The Antonian Architects 53
அஞ்சலித் தொகுப்பு 54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## வெண்பா

சிந்தை அணுவுஞ் சிலிர்க்குதையா காவலூராம்
நந்தவனம் கண்ட நறுமலரை - எந்த நாள்
கண்ணாலே பார்ப்போம் கரைந்துருகி நெஞ்சுமீட்டும்
பண்ணாலே ஊரமும் போது.


## எண்சீர் விருத்தம்

குருவாகி இளையோர்க்குக் கல்வி ஊட்டிக்
காணாத புதுயுகத்தைப் படைத்துப் பண்பின்
கருவாகி மனித நேயப் பாதை தன்னில்
கைகாட்டி போல்வந்து நின்றாய் ஞானத்
தருவாகி நிழல் கொடுத்துத் தங்கி யாறத்
தரணியில்நீ ஒளி வடித்த தீபம் அன்பின்
திருவாகிக் காலமெல்லாம் தொண்டு செய்த
தங்கமணிக் கலசத்தை இழந்தோம் வாழ்வில்

இலைதழுவிக் கொடியசைத்து இனிமை குளித்த
இளந்தென்றல் காற்றாய் அறிவைப் பொங்கும்
மலையருவி போற்சொரிந்து சென்றாய்.- மனித
மாண்பினையே கேடயமாய்க் கொண்டாய் இடரில்
தலைதடவி எப்பொழுதும் உறவை மண்ணில்
தாழவிதை ஊன்றிவைத்தாய் தமிழில் கொஞ்சும்
கலைமுழுகி வந்தமோன நிலவே - சாவுக்
கருமேகம் உனைமூடிக் கொண்டதேனோ-

அடிக்கின்ற துயரலைகள் நெஞ்சில் மோதி
ஊருறவும் உன்பிரிவுத் தீயில் மெழுகாய்
வடிக்கின்ற விழிமழையில் கழுவி நனைய
வாசமலர் நினைவுகளும் கலைந்தா போகும்?
துடிக்கின்ற உணர்வுகளில் முறுவ லிக்கும்
தங்கமுகம் தெரியுதம்மா அறிவை நாடிப்
படிக்கின்ற மாணவரின் மூத்த ஆசான்
பிரிந்திடநல் இதயங்கள் புலம்பும் அந்தோ-

எண்ணைந்து வருடங்கள் ஆசி ரியனாய்
உழைத்தமகன் இரட்னராஜா ஐயம் நீக்கக்
கண்வைத்துப் புவிவியக்கும் கல்விப் புலத்திற்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கண்வைத்துப் புவிவியக்கும் கல்விப் புலத்திற்
காலூன்றி ஒழுக்கமெனும் பயிரை நாட்டி
எண்ணைந்து வருடங்கள் ஆசி ரியனாய்
உழைத்தமகன் இரட்ணராஜா நிழலை விரித்த
மண்ணிதுதான் என்றதொரு பெருமை சொல்லும்
முகவுரையே போதுமடா- நன்றி மறவாக்
கண்ணீரில் தழையவிழும் பூக்கள் மட்டும்
கத்துகின்ற கடல்தந்த முத்தே- உனக்கா

எத்திக்கும் நிலம்பார்த்து நாணல் போல
ஏற்றமிகும் சாந்தவழி சென்று வீச்சுக்
கத்தியின்மேல் நடப்பதுபோல் கடமை தன்னை
கருத்தினிலே கொலுவிருத்தி வாழ்ந்தாய் மூச்சே
சத்தியமாய் முப்பொழுதும் கொண்டு இசைத்த
சோலைவாழ்ந்த குயில்பறந்த தம்மா- தொண்டுப்
புத்திரனே- தாழாத கதிரோன் தானும்
புகழேந்தும் உன்சரிதம் எழுதிச் செல்லும்

## அறுசீர் விருத்தம்

வையந் தன்னில் மனிதமென்றும்
விடியல் காண உழைத்தவனே-
ஐயம் விலக்கி ஆழமூழ்கி
அறிவு முத்தை எடுத்தவனே
பெய்யும் மழையாய்ப் பிறர்வாழ்வு
பூத்த மகிழச் சிரித்தவனே
ஐயா உந்தன் தடம்பதித்த
அழியா நினைவே நிலைக்குமன்றோ-

தங்க உள்ளம் -நம்பிக்கை
துள்ளும் வைரச் செயல்வீரம்
மங்கா தொளிரும் மதிநுட்பம்
மன்னிக் கின்ற தெய்வகுணம்
பொங்கும் கடல்போல் விரிந்தஞானம்
பொலிந்த மலரின் முகமுறுவல்
எங்கும் எதிலும் கிடைத்திடுமோ
இவரின் வாடா விழுமியங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலங் கவிந்த அறியாமை
நலிவை விலக்கும் சூரியனே
ஆல மரமாய் விழுதிறக்கி
உறவில் பழுத்த தரிசனம்
கோலங் காட்டி நீ மறையக்
கற்றோர் உலகம் கதறுதையா
காலம் பிரித்து மறைந்தாலும்
கவிதை உன்னை மறக்காது.


வான வில்லாய் மறையுமிந்த
வாழ்வில் என்றும் மாறாத
ஞானந் தெளிந்தும் இறையுணர்வை
நெஞ்சில் உயிராய்த் தேக்கிவைத்தாய்!
மோன நிலவு சிதறிவிட்டால்
மகிழும் அல்லி உலகிலுண்டோ
கானம் சுமந்து போகின்ற
காற்றில் முகாரி கேட்குதையா!

பூவில் வண்டாய் அறிவுத்தேன்
பருகி மகிழ்ந்த மாணவரும்
நாவை அடக்கிப் பேசுகின்ற
நல்ல புலமைச் சான்றோரும்
சேவைக் களத்தில் மேய்ந்துயுகச்
செலவு கண்ட தூயவரும்
சாவில் ஓடிச் சங்கமித்த
செம்மல் மௌனம் சகிப்பாரோ

**எழுசீர் விருத்தம்**

**மனைவி கண்ணீர்**

தேனுங் கசந்ததையா தினமும் தமிழ்கேட்டு
தேய்ந்ததோ சந்தனக் கட்டை
வானும் மதியும்போல் வாழ்ந்த காலமினி
வாழ்விலே வராதோ மகிழ
நானும் அலைகடலில் துரும்பு போற்கலங்கி
நிம்மதி இழந்தேன் நாளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானும் வலைவீழ்ந்து துடிக்கும் நிலைபோலுன்
மரணமும் எனக்கோ மன்னா!

### பிள்ளைகளின் பெருந்துயரம்

அன்பில் முழுகவைத்து அறிவில்முதிர வைத்து
ஈடிலா அருளின் வடிவே
துன்பம் தேளாகக் கொட்ட விழிநீரைத்
துடைத்துமே அரவ ணைத்தாய்
இன்பம் வாழ்த்திசைக்க எம்மை எதிர்காலம்
ஓடியே வந்து தழுவ
மின்னல் போல் வெட்டி மரணக் கொடுந்திரையில்
மறைந்ததேன் அப்பா - கனவாய்

### சுற்றத்தின் குமுறல்

பெற்ற தாய்போலக் கனிந்த அமுதூட்டி
பாசமே மழைபோல் பொழிந்துநின்றீர்
கற்ற நல்லறிவில் கருணை தனைவளர்த்து
குவலயம் தன்னில் மனிதம்
உற்ற பேரடைந்து ஓங்கித் தழைக்கநாளும்
உழைப்பதில் ஓய்ந்தீர் இல்லை
சுற்றம் துடிக்குதையா நீரைப் பிரிந்தமீன்போல்
சோகமே கதையாய்ச் சொல்லி

### தேற்றம்
### எண்சீர் விருத்தம்

புவிமுழுதும் ஒருகுடையில் அரசாண் டோரும்
புதுயுகத்தைப் படைக்கவெனப் புறப்பட டோரும்
செவிக்கினிய வாக்குரைத்த சான்றோர் தாமும்
செயற்கரிய விந்தைசெய்த விற்பன் னருடனும்
குவிக்கின்ற வெற்றிகளை வரவாக் கினோரும்
கதைமுடிந்து சாவிற்தான் சந்திப் பாரே-
தவிக்கிறோம் தீப்பட்ட புழுப்போல் வல்ல
தேவனாணை இதுவென்று தெளிந்து கொள்வோம்.

*பாசையூர் கவிஞர் மு. சிங்கராயர்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ஆயரின் இரங்கற் செய்தி

கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய பங்கு மகனும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முன்னாள் அதிபருமான S.A.E. ரட்ணராஜா அவர்களின் மரணம் அவரின் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல கரம்பொன் பங்குத் திருச்சபைக்கும் ஒரு பேரிழப்பாகும்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியையும் கரம்பொன் பங்குத் திருச்சபையையும் தன் இரு கண்கள் எனப் பேணி வளர்த்தவர் இவர். 1976ஆம் ஆண்டு குருக்களின் கையில் இருந்து அந்தோனியார் கல்லூரி மாற்றம் பெற்றபோது அதன் அதிபராகி 1995ஆம் ஆண்டு வரை அவர் ஆற்றிய பணிகளை ஊர்காவற்றுறை வாழ் கல்வி சமூகம் என்றும் மறந்துவிடாது.

கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தையும் அதன் தேவைகளையும் தன்னுடையதாக்கி அல்லும் பகலும் அதற்காக உழைத்தவர் அமரர் ரட்ணராஜா அவர்களாவார். பங்குத் தந்தைக்கடுத்ததாக அப்பங்கின் அனைத்துமாக எல்லாக் காலங்களிலும் இவர் விளங்கினார் என்பதற்கு இங்கும் வெளிநாடுகளிலும் வாழும் கரம்பொன் பங்குமக்கள் சாட்சிகளாவர்.

இறப்பு என்பது மனித வாழ்க்கையின் தவிர்க்கப்படமுடியாததொன்று. எம்மோடு வாழ்ந்து இறக்கின்றவர்கள் உயிர்த்து ஒரு புதுவாழ்வு வாழ்கின்றார்கள் என்பது எமது நம்பிக்கை. இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

நேர்மையான அன்பான, அமைதியான, முன்மாதிரிகையான வாழ்வு வாழ்ந்த இவர் தன்னுடைய இவ்வுலக எல்லாப் பணிகளுக்காகவும் இறைவனின் நிறைவான சம்பாவனையைப் பெறவேண்டும் என இறையாசி வேண்டுகிறோம்.

*†மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை*
*யாழ். ஆயர்*

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.
10-06-2004





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE OF CONDOLENCE FROM THE BISHOP OF TRINCO-BATTICALOA

With sentiments of deepest grief over the passing away of Mr.. Ratnarajah, I join his bereaved family, friends, past students and kith and kin.

I have associated with him from our school days and later on as a teacher at St. Antony 's College, Kayts. I could find in him a faithful friend, a disciplined and religiously devout person, a responsible parent and a conscientious teacher and guide. The fact that such a jewel of a person is no more with us makes his loss irreparable.

I also recall the important role he played and the enthusiasm and love he evinced in the celebration of the Centenary of St. Antony's College in 1972. It was there, that he toiled hard and finally succeeded in creating the "Emilianuspillai Technical Institute", to absorb the drop-outs from the school.

He took over the reins of office of the Rector/ Principal of the school in 1975. It should be recorded in the annals of the school that he was the first layman who succeeded an array of illustrious man who were all Priests. But his performance and total Commitment were not second to that of his predecessors.


I had the opportunity to work with him closely as General Manager of R.C. Schools especially during the dark days of handing over of the school to the State in 1976.

Mr. Ratnakily as he was fondly called was struggling hard to retain the identity and religous character of the school. But the Bishop of Jaffna had to make the painful decision of handing over due to inevitable circumstances. Out of 39 years of his service as a graduate teacher he served for 20 years as a Principal and contributed in a very large measure to the development of the school until his retirement in 1995.

After a remarkable career he spent his life in service to the Church and community, living in his home, like a hermit close to God in prayer. We pray that the Good Lord will reward him amply as He had promised to His servants and bless his dear wife, children and grand-children.

Good Bye, Sweet prince, Good Bye; and God Bless you

† *Kingsley Swampillai*
Bishop of Trincomallee - Batticaloa





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A GREAT CATHOLIC LEADER

I was saddened to hear the death of Mr. S.A.E. Ratnarajah, of Karampon, the Former Principal of St. Antony's College, Kayts.

He was a man of deep faith in the Lord and his committment to duty was very outstanding. He was a well devoted Catholic Leader who instilled the same in those numerous students who were entrusted to his care.

He has made great contribution to Church and Catholic education in the Islands as Principal and a Catholic lay Leader. Because of his profound attachment to the Church he carried out his services with enthusiasm and great pleasure. He gave up all his comforts in order to serve the poor people. who were left behind during the on going war.

I convey my prayers and sympathies to his beloved wife, the three daughters and the grandchildren.

May the Lord grant eternal reward to him.

† *L. R. Antony*
Bishop Emeritus of Trincomallee - Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்ட குருமுதல்வரின் செய்தி

தீவுப்பகுதி முழுவதிலும் நன்கு அறியப்பட்டவரான மறைந்த S.A.E. ரட்ணராஜா அவர்களின் மறைவு உண்மையிலே ஒரு பேரிழப்பாகும். அவரின் பிரிவால் துயருறும் அவரின் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறேன்.

யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நான் பணியாற்றியபோது தீவுப்பகுதி கத்தோலிக்க ஆசிரியர் சங்க செயற்பாடுகளில் அவர் பெரிதும் துணை புரிந்திருக்கிறார். யாழ் மறை மாவட்ட மேய்ப்புப் பணி மகாநாடு 1994இல் இடம் பெற்றபோதும் இவரின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எமக்கு கிடைத்து இருக்கின்றன.

தனது 37 ஆண்டு கால ஆசிரியப் பணி முழுவதையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கே அர்ப்பணித்து 20 ஆண்டுகள் அதன் அதிபராக பணியாற்றினார். இந்தப் பெருமை இவரை மட்டுமே சாரும். இவருக்குப் பின் இந்த வாய்ப்பு யாருக்கும் கிட்டாது என்றே நினைக்கிறேன்.

பொதுப் பணிகளில் எப்போதும் ஆர்வமுடன் முன்னின்று உழைக்கும் இவர் எல்லோராலும் மதிக்கப்பட்டும் விரும்பப்பட்டும் இருந்த ஒரு நல்ல மனிதராவார்.

இறைவன் இவரின் நல்ல கிறிஸ்தவ வாழ்வையும் அர்ப்பண வாழ்வையும் நன்கறிந்து இவரின் தவறுகளை மன்னித்து நிச்சயம் தனது நித்திய பேரின்பத்தில் இவரை இணைத்துக் கொள்ளுவார் என்ற நம்பிக்கையோடு குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.

ஜே. நீக்கிலஸ் அடிகளார்
மறைமாவட்ட குருமுதல்வர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையும் அன்பும் கொண்டவர்


அமரர் எஸ். ஏ. இ. இரட்ணராஜாவின் திடீர் மரணம் உண்மையிலேயே ஒரு அதிர்ச்சி தரும் செய்தியாகும். இவரின் இறப்பை பற்றிக் கேள்விப்பட்டது முதல் இவரின் நினைப்பே என் மனதில் வந்துகொண்டிருக்கிறது.

புனித பத்திரிசியார் கல்லூரியில் நான் அதிபராக இருந்தபோது திருமதி இரட்ணராஜா அங்கு ஆசிரியப் பணி புரிந்தார். நான் அனுராதபுரத்தில் அதிபராக இருந்த காலத்தில் இருந்தே எனக்கு மிகவும் நெருக்கமாக இருந்த இவரின் இறப்பு ஈடுசெய்யப்பட முடியாததாகும்.

ஒரு நேர்மையான மனிதனாக, எப்போதும் பணிபுரியும் ஒரு மனிதனாக எல்லோரையும் அன்போடு அணைத்து உதவிசெய்யும் ஒரு மனிதனாக வாழ்ந்த இவர் திடீரென எம்மையெல்லாம் விட்டு பிரிந்துவிட்டாரே என நினைக்கும்போது மனதுக்கு பெரிதும் வருத்தமாக இருக்கிறது.

இரட்ணக்கிளி என்று அன்பாக அழைக்கப்படும் இவரின் இழப்பு குடும்பத்தினருக்கு மட்டுமல்ல கரம்பொனுக்கும் பேரிழப்பாகும். மனைவிக்கும் பிள்ளைகள் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து இவரின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியடைய இறைவனை வேண்டுகிறேன்.

*அருட்திரு* T. A. J. *மதுரநாயகம்*
D - 10
கிளிநொச்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*I was touched by his unique love for his own Parish*

# AN APPRECIATION FROM THE DEAN OF JAFFNA

It is with a feeling of sorrow that I write these few words about this special gentleman Mr. S.A.E. Ratnarajah a much loved and respected Cluster Principal and Principal of St Anthony's College Kayts. I came to know him as an educationist when our late Bishop Deogupillai sent me to teach at our great St Anthony's College, when the late Rev. Fr. B. Soosaipillai was the Rector. At the completion of the first week itself I realized that all the great things I had heard about "Retnakili Master" were true. He was blessed with an admirable personality. I found in him a dedicated teacher serious about discipline. I am sure he enjoyed his teaching especially when he taught English. Every time I met him after his retirement I was touched by his unique love for his own Parish Church St Sebastian's Karampon. He wanted to see this parish come back to its former glory with a resident Parish priest and renewed parish life. I am sure that the Lord fulfilled most of his dreams about his dear St. Anthony's College and St. Sebastian's parish.

Though he is no more with us his spirit will continue to be with us especially when we contribute our tiny share towards realizing the ideals he had with regard to providing better educational facilities to students living in difficult areas of our Island.

*"Whatever you do for one of these least brothers of mine you do it to me"*

(Cf. Mt. 25:40).

May he enjoy eternal peace

*Rev. Fr. Michael Savundranayagam*

Parish Priest

St. Marys' Cathedral

Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின்


# இரங்கற் செய்தி

நாற்பது ஆண்டுகள் கல்வி உலகில் அர்ப்பணத்தோடு அயராது உழைத்து 1995இல் ஓய்வு பெற்று, அண்மையில் அமரத்துவம் அடைந்த அமரர் எஸ். ஏ .இ. இரட்ணராஜா அவர்களின் மனைவி பிள்ளைகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கிறேன்.

அமரர் இரட்ணராஜா அவர்களை புனித அந்தோனியார் கல்லூரியில் நான் கல்வி பயின்றபோது ஓர் இளம் ஆற்றல்மிக்க ஆசிரியனாக கண்டேன். இனிமையான இயல்பும் கவர்ச்சியான ஆளுமையும் கொண்ட இவர் புனித அந்தோனியார் கல்லூரி அரச மயமாக்கல், ஈழப்போர்கள், தீவுப் பகுதியின் இராணுவ ஆக்கிரமிப்பு, இடப்பெயர்வு போன்ற இக்கட்டான காலகட்டங்களில் தனது கல்லூரியின் தனித்தன்மையை பாதுகாத்து அதன் பல்துறை மேம்பாட்டிற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டார். தீவகத்தின் இருள் சூழ்ந்த காலத்தில் தீவக மாணவர்களுக்கும் ஆசிரிய சமூகத்திற்கும் அதிபர்களுக்கும் கொத்தணி அதிபராக இருந்து வழிகாட்டியும் நெறிப்படுத்தியும் கலங்கரை விளக்காக திகழ்ந்தார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II இற்கு தரம் உயர்ந்து சென்று, ஊர்காவற்றுறை பிரதேச பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியே தனது மூச்செனக் கொண்டு புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபராக இறுதிவரை பணியாற்றினார். பதவி உயர்வுகளை மறுத்து இக்காலத்தின் கோலத்திற்குப் புறம்பான உயர்ந்த உள்ளத்தினைத் தெட்டத் தெளிவாகத் தனது பணியினூடாக எமக்குக் காட்டினார்.

இவர் 30 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த கையிற்ஸ் றேஞ்சர்ஸ் ஸ்போட்ஸ் கிளப் (Kayts Rangers Sports Club) பிரதேச இளைஞர்களிடம் ஒற்றுமையையும் அன்பையும் வளர்க்கப் பெரிதும் உதவியது. கல்விச் சேவையில் இருந்துகொண்டே கரம்பொன் செபஸ்தியார் ஆலய பங்குச்சபை நிர்வாக உறுப்பினராகவும் இருந்து மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார்.இவரது இழப்பு தீவகக் கல்விச் சமூகத்திற்கும், செபஸ்தியார் ஆலய பங்கிற்கும், கரம்பொன் கிராமத்திற்கும் ஈடுசெய்ய முடியாததொன்றாகும். இவரது நல்ல உள்ளத்தையும் விசவாசத்தையும் இரக்கமுள்ள இறைவன் கண்ணுற்று இவருக்கு நித்திய வாழ்வில் இடமளிக்கவேண்டி இறைஞ்சுகிறேன்.



*அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்*
அதிபர்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WE SALUTE OUR LATE PRINCIPAL

*— S.A.E.Ratnarajah*

It is sad that we lost our Dear Principal Late S. A E. Ratnarajah on the 20th of May 2004. The members of the Antonian Family lost an able leader of our family. An eminent leader who contributed and led the college for four decades is no more. He laboured hard and saw to it that the glory of St .Antony's College be global. His contribution to the college during the displacement is commendable. Even at the risk of his life, he took all the possible important documents and paved the way for the college to continue to function in Jaffita and other places until the College come back to its place. The Antonian Family will remember his service for many more years in the future.

His dedicated service at St. Sebastian's Church especially after the displacement cannot be forgotten. The credit goes to him for the present glorious position.

We, the Antonian Family bid farewell to our departed Principal and salute him.

May he rest in peace.

*Revd .Fr. J. A. Jesuthas*

Rector St. Antony's College Kayts,

Parish Priest, Karampon.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசத்தின் காவலனாகத் திகழ்ந்தவர்

முன்னாள் புனித அந்தோனியார் கல்லூரி அதிபரும், கரம்பொன் கிராமத்து நல்ல ஆர்வமுள்ள சிறந்த பொதுநிலையினருமான எஸ். ஏ. இ. இரத்தினராஜா எம் மண் தந்த சிறந்த முத்து எனலாம்.

கல்விப் பணியிலும் சமயப்பணியிலும் தன்னை முற்றும் முழுவதும் ஈடுபடுத்தி, இணைத்துக் கொண்டவர். அவரால் வாழ்வில் ஏற்றம் கண்டவர் பலர். அவரின் நல்லாக்கத் திறமையும், ஆற்றல்களும் சமய, சமூக, கல்விப்பணிக்குப் பெரும் பங்களிப்பாக துணைபோனது. கரம்பொன் மண்ணிலே தன்னை அவ்வப்பொழுது ஈடுபடுத்தி அனைவரின் நலன்களில் நற்பங்காற்றியவர். கல்வி சார்ந்த விடயங்களில் மாத்திரமல்ல ஏனைய துறைகளிலும் எப்போதும் சிறந்த ஆலோசனை வழங்கினார்.

1995 இடப்பெயர்விற்கு பின்னர், சிறப்பாக தன் சொந்த கிராமத்திலே வாழ வேண்டுமென்ற துடிப்பிலே உடனடியாக மீண்டும் புதிய வாழ்வை ஆரம்பித்தார். அவரின் ஆர்வம் ஆலயத்தில் சிறப்பாகக் காணப்பட்டது. ஆலயத்தை அழகுபடுத்தவும் பராமரிக்கவும் அல்லும் பகலும் அயராது உழைத்தார். அதன் பலனாக புனித செபஸ்தியார் ஆலயம் தீவுப்பகுதியிலே புதுப்பொலிவுடன் மிளிர வழிசெய்தார்.

நீண்ட காலமாகப் பரம்பரை பரம்பரையாக இருந்து கத்தோலிக்க விசுவாசம் நிலைகுலையக் கூடாதென உழைத்தார். பங்குக்குருவின் பிரசன்னம் கரம்பொன் ஊருக்கு நல்லதென்பதை எப்பொழுதும் வலியுறுத்திக் கூறுவார்.

எம் மண் போற்றும் சிறந்த ஆசானை கல்விமானை நல் ஆலோசகரை சிறந்த பொது நிலையினரை இழந்து விட்டோம். மண்ணிலிருந்து மறைந்தாலும், அவர் இம் மண்ணிலே பதித்த வாழ்வுத் தடங்கள் காலத்தால் அழியாதவை, வரலாற்றில் என்றும் நினைத்திருப்பவை.

**அருள்திரு R.X. சகாயநாயகம்**
பங்குத்தந்தை
புனித யாகப்பர் ஆலயம்
குருநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக மக்களின் சமூகத் தொண்டன்

**"தந்தையே நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள்**


**என்னோடு இருக்க வேண்டும். என விரும்புகிறேன்"** (யோவான் 17:24)

அழிவுக்குரிய இவ்உடல் அழியாமையையும் சாகாமையையும் மரணத்தின் வழியாக அணிந்தால்தான் இறைவனிடம் செல்ல முடியுமென வேதாகமம் கூறுகிறது. திரு எஸ். ஏ. இ. இரட்ணராஜா அவர்களும் இறைவனிடம் செல்வதற்காக எம்மிடம் விடைபெற்று சென்றுவிட்டார். கரம்பொன் புனித செபஸ்தியார் பங்கைச் சேர்ந்த பலர் 1991ம் ஆண்டு புலம்பெயர்ந்தும் இவர் இங்கே பணிபுரியத் தங்கிவிட்டார். ஆலயம் புனிதமாகவும், சுற்றாடல் சுத்தமாகவும், மக்கள் மாண்புடனும், கோவிலைச் சூழவுள்ள பயன் தரும் மரங்கள் செழிப்பாகவும் இருக்கவேண்டுமென்று உழைத்தார். காவலூர் புனித அந்தோனியார் பாடசாலை அதிபராக கரம்பொன் ஆலய மேற்பார்வையாளனாக, பணியாளனாக, தீவக மக்களின் சமூகத் தொண்டனாகப் பணிபுரிந்த இவரது ஆன்மா இறைவனில் சாந்தியடைய மன்றாடுவோம். சில ஆயர்களையும் பல குருக்களையும் கன்னியர்களையும் திருச்சபைக்கு அர்ப்பணித்த கரம்பொன் பங்கில், வாழ்ந்து பணிபுரிய குருக்கள் இல்லாத நிலை அவரது மரணத்தின் முன் நீக்கப்பட்டதையிட்டு மகிழ்ந்தார்.

இவருடைய பிரிவால் துயருறுவோர், இவரைப் பின்பற்றிப் பணியாற்றி இறைவனின் நித்திய வீட்டில் மீண்டும் சந்திப்பார்களாக.

அடைக்கலமாதா ஆலயம்
4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

*தவத்திரு ம. இ. பயஸ்*
11.06.04
யாழ்ப்பாணம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியத்திற்கு சாட்சியம் புரிந்து வாழ்ந்தவர்

இற்றைக்கு 38 வருடங்களிற்கு முன்னர் அதாவது 1966 பங்குனி மாதம் 9ம் திகதி 4.30 மணிக்கு யான் முதன்முதலாக எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் இரத்தினகிளியை சந்தித்ததும் கரம்பொன் புனித செபஸ்தியார் குருமனையில் என்னை அவருக்கே உரித்தான புன்னகையுடனும் பாசம் நிறை சொற்களால் வரவேற்றதும் இன்னும் என் மனதில் பசுமையான நினைவலைகளை மீட்டிக் கொண்டிருக்கின்றன. அன்று அவர் என்னைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள் "சுவாமி யான் உங்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து தருவேன்" இவ்வார்த்தைகளுக்கு அவர் யான் கரம்பொன் பங்கில் பணியாற்றிய ஏழு வருடங்களிலும் பிரமாணிக்கமாகவே வாழ்ந்து வந்தார். அந்த ஏழு வருட உறவு எம்மத்தியில் ஓர் பாசம் நிறை சகோதரப் பிணைப்பாகி அவரது இறுதி மூச்சுவரை அது முழுமை பெற்றிருந்தது.

எமது உரையாடல்களில் அவரது பேச்சும் மூச்சும் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தைப் பற்றியும், அவர் முழு அன்போடும் பணிபுரிந்த ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியைப் பற்றியதேயாகும். அக்கல்லூரியில் அவர் நாற்பது ஆண்டு நீடிய ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் ஆற்றியுள்ளார். அதில் இருபது ஆண்டு காலம் அதன் அதிபராக உன்னத பணியாற்றி இருக்கிறார். அகத்திலும் புறத்திலும் அழகான இவர் தனது ஆளுமையான வாழ்வில் எல்லாவித நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் சததியததறகு, சாடசியம புாநதவராகவே இறுதி மடடும வாழநது வநதார். திருசசபைத தலைவர்களோ, பெரியோரோ, சிறியோரோ எவருக்கும் கசப்பான உண்மைகளை அஞ்சாது ஒழியாது சொல்லி வைக்கும் நேர்மையாளர் அமரர் இரத்தினகிளி. கடமை உணர்வு நிதானம், உண்மைத் தன்மை - சுயநல போக்கற்ற தன்மை இவைகள் அமரர் இரத்தினராசாவினுடைய சேவைக்கு மெருகூட்டியுள்ளன. ஆழமான தெளிந்த அறிவு தமிழிலும் ஆங்கிலத்திலும் நிறைந்த புலமை ஆதியன அவரிடம் மறைந்து கிடந்த ஆற்றல்களாகும்.



யான் கரம்பொன் பங்கிலிருந்து ஆறுநாட்கள் அகவாசத்துடன் இளவாலைப் பங்கிற்கு மாற்றலாகிய பொழுது, ஐந்து நாட்களில் தனதும் பங்கு மக்களினதும் அன்பின் நன்றியின் சின்னமாக வாலிபருக்கும் முன் பள்ளிச் சிறார்களுக்குமாக "அன்பில் மலர்ந்த மன்றத்தை" கட்டி முடித்து ஆறாம் நாளில் அம்மன்றத்தைத் திறந்து வைத்து அதனுள்ளே வாலிபருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேர்ந்து எமது பிரியாவிடை இராப்போசனத்தையும் வைத்து வெற்றி கண்ட அன்பின் செயல் வீரன்.

காலம் சென்ற ஆயர் தியோகுப்பிள்ளை யாழ் ஆயராகப் பொறுப்பேற்று கரம்பொன் பங்கிற்கு வருகை தந்தபொழுது புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்திற்கு, செபஸ்தியார் பாத்திரமாக அமரர் இரத்தினராசா நடித்தார். திறமையான நடிகன் என யாவராலும் போற்றப்பட்டார். எனதருகே இருந்த ஆயர் "நபோனார் பட்டணத்து தளபதி அதே செபஸ்தியாரே என் கண் முன் தோன்றுவது போல் இருந்தது" என்று வியந்து போற்றினார்.

இப்படியாக பல அருள் வரங்களையும் பெற்றிருந்த இப்பெருமகன் நல்ல ஊழியம் புரிந்து பிரமாணிக்கமுள்ள ஊழியனின் சம்பாவனையைப் பெறுவதற்கு எசமானால் அவரது சித்தத்திற்கேற்ப பரகதி அழைக்கப்பட்டுள்ளார் எனவே அன்புநிறை இறைவா உமது சித்தமே எமது பேறு- உமக்கு நன்றிகூறி இப்படியான ஒருநல்ல பெருந்தகையைத் தனது அருமைக் கணவராகப் பெற்ற அவரது அன்பு மனையாள் புவனேஸ்வரிஅம்மா, பாசமுள்ள பிள்ளைகள் மஞ்சுளா, ஊர்மிளா, சர்மிளா, மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவரும் அமரர் இரத்தினராசா அவர்கள் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் இருக்கிறார். என்ற நம்பிக்கையுடன் ஆறுதல் அடையவேண்டுமென்று வேண்டுகிறேன்.

அருட்தந்தை கலாநிதி
*சி. இ. நி. குணசீலன்*

ஆயர் எமிலியானுஸ் ஞாபக இல்லம்
306, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



At the prime of youth



In wedded Life




With Antonian Staff - 1978


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



At College Sportsmeet with Former M.P:Mr.K.P.Ratnam



Addressing at the Silver Jubilee of Fr.B.F.Boniface



As Chief Guest at Oil Vizha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இவரின் வெற்றிடம் என்றுமே எவராலும் நிரப்பப்பட முடியாதது

இரட்ணக்கிளி மாஸ்ரர் என அன்பாக அழைக்கப்பட்டு வந்த அமரர் எஸ். ஏ. இ. இரட்ணராஜா அவர்களை பத்திரிசியார் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு பரிசளிப்பு விழாவின்போது பார்த்தேன். திருமதி இரட்ணராஜா பத்திரிசியார் கல்லூரியில் எமது ஆசிரியையாக இருந்தபொழுது ஒரு பரிசளிப்பு விழாவிற்கு கணவரையும் அழைத்து வந்தபோதே இது நிகழ்ந்தது.

1988 ஆம் ஆண்டு கரம்பொன் பங்கின் பொறுப்பினை ஏற்கவேண்டிய நிலைப்பாடு ஏற்பட்டபோது எமது ஆசிரியை திருமதி இரட்ணராஜா ஆலயத்திற்கு அருகில் இருக்கிறார் என்ற நினைப்பே எனக்கு முதலில் வந்தது. கரம்பொன் பங்கிற்கு நான் வருவதாக அறிவித்திருந்த தினம் என்னால் போக முடியவில்லை. மண்டைதீவிலிருந்து அதற்கு அடுத்தநாள் செபஸ்தியார் கோவில் நோக்கிப் போனபோது திரு. இரட்ணராஜா அவர்களுடைய பணியாளர் இறுவன், மாஸ்ரர் நேற்று பள்ளிக்கூடத்தையும் லீவு போட்டுவிட்டு உங்களை பார்த்துக்கொண்டு நிண்டவர் இண்டைக்கு நீங்கள் வந்தவுடன் ஓடிவந்து அறிவிக்கச் சொன்னவர் என்று ஓடிப்போய் கூட்டி வந்தார். அப்போதுதான் இந்த உயர்ந்த மனிதனோடு பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது.

நேற்று நாள் முழுக்க உங்களுக்காக நான் காவல் இருந்தேன். அது பரவாயில்லை. கரம்பொன் பங்கிற்கு வருகைதரும் மிக இளமையான சுவாமி நீங்கள்தான். நானும் உங்கட ரீச்சரும் உங்களுக்கு எல்லா உதவிகளும் செய்வோம் என்று கூறிக்கொண்டே என்னுடைய பொருட்களை தானே தூக்கி உள்ளே கொண்டுபோய் வைக்கத் தொடங்கினார். எனக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இது கரம்பொன் பங்கிற்கு நான் சென்றபோது எனக்கு கிடைத்த வரவேற்பு. கரம்பொன் பங்கைவிட்டு நான் வெளியேறியபோது அவரிடம் பிரியாவிடை பகர கால அவகாசம் இருக்கவில்லை. இராணுவ நடவடிக்கையால் எல்லாவற்றையும் விட்டு எல்லோருமே சிதறி ஓடியபோது இறுதிநேரத்தில் அமைதியாகப்பேசி விடைபெற முடியவில்லை.

இந்த இடைப்பட்ட காலத்தில் கரம்பொன் பங்கில் இவருடைய ஆற்றலையும் ஆளுமையையும் செயற்திறனையும் திட்டமிடும் பாங்கையும் துணிந்து செயற்படும் விதத்தையும் நான் நன்கு அறிந்திருக்கிறேன். எந்தவொரு திட்டத்தை பங்கிற்காக திட்டமிட்டவுடனும் அது தனது வேலை என்பதுபோல் முற்றுமுழுதாக தன்னையும் தன் சார்ந்த பணியாளர்களையும் ஈடுபடுத்தி வெற்றி கிடைக்கும்வரை கடினமாக உழைக்கும் ஒரு நற்பணியாளன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம்பொன் பங்கில் நாம் ஆற்றிய பல செயல்திட்டங்களின் பின்னணியில் அமைதியாக நின்று ஆர்ப்பாட்டம் இல்லாமல் உழைத்தவர் இவர். பங்கின் உயர் பதவிகளை வகிக்கவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் கொள்ளாது நிறை பணிகளை புரியவேண்டும் என்பதில் மனவிருப்பு கொண்டவர் இவர். எதைச் செய்தாலும் அதை முழுமையாக நிறைவாக கரம்பொன் பங்கின் நல்வளர்ச்சிக்காக என்ற மனநிலையுடன் ஆற்றுபவர். கரம்பொன் செபஸ்தியார் கோவிலுக்கு பணிசெய்யும்படிதான் என்னை பக்கத்திலே செபஸ்தியார் வைத்திருக்கிறார் என்று அவர் அடிக்கடி கூறிய வார்த்தைகளின் ஆழ்ந்த அர்த்தத்தை உடனடியாக நான் புரிந்துகொள்ளவில்லை.

மாஸ்ரர் இல்லாவிட்டால் நாம் கரம்பொனுக்கு போக மாட்டோம். மாஸ்ரர் இருக்கிறபடியால்தான் கரம்பொன் செபஸ்தியார் கோவில் சிறப்பாக இருக்கிறது என்று பலர் கூறிக்கொண்டதை நான் கேட்டிருக்கிறேன். இந்த வார்த்தைகளின் விளைவுகள் இனி எப்படியாகுமோ என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. உண்மையில் இவரின் இறப்பு கரம்பொன் பங்கிற்கு ஒரு பேரிழப்பு.

இவருக்கு உரிய விதமாக பிரியாவிடை பகராமல் கரம்பொன் மண்ணைவிட்டு வெளிவந்ததோ என்னவோ இவரின் இறப்பின் இறுதி வாரத்தில் இவரைக் கண்டு மிக நீண்ட நேரம் பேசிக்கொண்டிருக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அந்த நேரத்தில் அவர் பேசிக்கொண்ட வார்த்தைகள் அனைத்தும் வித்தியாசமானவையாய் இருந்தன. விசேட கருத்துக்களை கொண்டனவாய் இருந்தன. தனிப்பட்ட வியப்பை தருவனவாய் இருந்தன. ஆனால் அவற்றின் அர்த்தத்தை அவரது திடீர் இறப்பின்போதே புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

நான் முதலில் இறந்துபோக விரும்பவில்லை. நான் இல்லாவிட்டால் தேவி தனிய இருக்க மாட்டா. எனது விதவையான மகளின் வாழ்விற்கு நான் பெரும்துணை புரியவேண்டும் என்று தெரிவித்தார். வெளிநாடு போவது எனக்கு விருப்பமில்லை. எனது மனைவி தன் விருப்பப்படி இடைக்கிடை போய்விட்டு வரட்டும் அல்லது பிள்ளைகள் வந்து பார்த்துவிட்டுப் போகட்டும் என்று தெரிவித்தார். கரம்பொன் செபஸ்தியார் ஆலயத்தை இனி யார் பார்க்கப் போகிறார்கள் என நான் உண்மையிலே மனமுடைந்து வேதனைப்பட்டுப் போயிருக்கிறேன். பள்ளிக்கூடத்திற்கு பிறகு செபஸ்தியார் கோவில் சங்கிலித்தாம் வேலையைத்தான் செய்வதென நான் திட்டமிட்டிருந்தேன். இப்போது கரம்பொன் அழிந்துபோகப் போகிறது என்று எனக்கு பயமாக இருக்கிறது. கத்தோலிக்கத்தின் நிலைப்பாடு கரம்பொனில் பெரிதும் கேள்விக்குறியாய் இருக்கிறது. செபஸ்தியார் ஆலயத்தின் சிறப்பும் தனித்தன்மையும் இனி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரழியப் போகிறது எனப் பல கருத்துக்களை சிலவேளை தொடர்பில்லாததுபோல் அங்கொன்றும் இங்கொன்றுமாக தெரிவித்தார்.

நீண்டநேரம் தனியாக அமர்ந்து பேசிய பின்னர் நான்கு ஐந்து நாட்கள் கூட ஆகவில்லை. அவரின் இறப்புச் செய்தி எனக்கு கிடைத்தது. பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் இறுதி வாரத்தில் அவரோடு போய் அமைதியாக இருந்து உரையாடி கரம்பொன் பங்கை விட்டு வெளிவந்தபோது தெரிவிக்காத பிரியாவிடையை இப்போ தெரிவித்திருக்கிறேன் என்று மனம் ஆறுதலடைந்தது. இறப்பு என்பது மனித வாழ்க்கையில் தவிர்க்கப்பட முடியாததொன்று. சிலரின் இறப்புக்கள் மனித வாழ்க்கையில் என்றுமே நிறைவுசெய்யப்பட முடியாதவையாக இருப்பதும் உண்டு.

எடுப்பான தோற்றம், நிமிர்ந்த பார்வை, உசாரான நடை, சிரித்த முகம், அன்பான வார்த்தை, அனைவரையும் அரவணைக்கும் நற்சுபாவம் என்பனவற்றை தன்னகத்தே கொண்ட இவரின் இடத்தை இனி யாரும் நிறைவுசெய்ய முடியாதென்றே நம்புகிறேன். இவரின் பிறப்போடும் வளர்ப்போடும் இவரில் கலந்த பல நற்பண்புகள் எமக்கெல்லாம் நற்படிப்பினைகள் ஆகும். குருக்களை, அவர்கள் தமது மாணவர்களாக இருந்தபோதும் மதிப்போடும் பணிவோடும் அணுகும் விதம் மனிதர் என்கின்ற வகையில் அனைவரையும் மதிக்கும் உயர் பண்பு எல்லோருக்கும் எப்போதும் நன்மையே புரியவேண்டும் என்ற பரந்தநோக்கு என்பவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டு எல்லோருக்கும் எல்லாமாக வாழ்ந்த ஒரு நல்ல தொண்டனை இழந்துவிட்ட ஒருசோக மனநிலை அவரோடு மிக நெருக்கமாகப் பழகிய அனைவர் மனதுகளிலும் என்றும் நெருடிக்கொண்டே இருக்கும். இவரின் மனைவி பிள்ளைகளுக்கு அனுதாபங்களையும் இவரின் ஆன்மா இறைவனில் அமைதியடையச் செபங்களையும் அர்ப்பணிப்போம்.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்
யாழ்ப்பாணம்.

*அருள்திரு ஞபன் மரியாம்பிள்ளை*
முன்னாள் பங்குத்தந்தை
கரம்பொன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தொண்டாற்றிய மாமனிதர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த அமரர் எஸ். ஏ. இ. இரட்ணராஜா அவர்களின் உடல் இவ்வுலகை விட்டுப்பிரிந்தாலும் அவர் வாழ்வில் விட்டுச்சென்ற பணியின் சுவடுகள் எம்முடன் வாழ்கின்றன என்பதில் ஐயமில்லை. எக்காரியத்தையும் தடையின்றி நிறைவேற்றும் செயல் வீரனாக, ஏற்றத்தாழ்வுகளை அகற்றி அனைவரோடும் ஒன்றுபட்டு உழைத்த தேச பக்தனாக தீவக மண்ணில் தனக்கென தனியிடம் ஒன்றை வகுத்து வாழ்ந்து 'இரட்ணக்கிளி மாஸ்ரர்' எனும் சிறப்பு பெயரோடு விளங்கிய இந்த தீவக மைந்தன் எம்மை விட்டுப்பிரிந்து மாதம் ஒன்று மறைந்துவிட்டது. சிறந்த சமூக சேவையாளனாகக் கல்விக்கும் சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்றியவர். தீவகத்தைப் பற்றி அறிந்து தெரிந்து கொள்ள வருபவர்கள் அனைவருக்கும் உசாத்துணையாக நிற்பவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதற்கிணங்க இத்தீவகத்திலே முதன்மையான கல்லூரியான ஊர் - புனித அந்தோனியார் கல்லூரியிலே ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக தசாப்த காலமாக பணியாற்றி கல்விக்குப் பெரும் பணிபுரிந்தவர்.

**"தக்கார் தகவிலார் என்பது அவரது எச்சத்தாற் காணப்படும்"**
என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப இவரின் பணி வாழ்வு இச்சமூகத்திற்கே முன்மாதிரியான வழிகாட்டல் என்று கூறினால் மிகையாகாது.

அன்புள்ளம் கொண்ட கணவனாக, பாசமிகு தந்தையாக, சமூகத்தின் ஒளி விளக்காக வாழ்ந்து அமரத்துவம் அடைந்த இந்த மாமனிதரின் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் அனைவருடனும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

*ஜே. எக்ஸ். செல்வநாயகம்*
உதவி அரசாங்க அதிபர்.

தீவகம் வடக்கு
ஊர்காவற்றுறை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அதிர்ந்த அந்த நாட்களும் அதிபர் இரட்ணராஜாவின் அர்ப்பணிப்பும்

1990 செப்ரம்பர் 28 கோட்டை முற்றுகை (Operation Fort) என்ற இராணுவக் குறியீட்டு பெயருடன் இலங்கை இராணுவம் தீவகத்தை ஊடறுத்து நகர்ந்து கொண்ட அன்றைய நாட்கள் இன்று ஒரு வரலாற்றுக் குறிப்பாக மாறியிருக்கலாம். தீவகம் இராணுவ நகர்வில் பாரிய இழப்பைச் சந்தித்துக் கொண்டது. காவலூர் தொடங்கி வடக்கு நாரந்தனை ஊடாக சரவணை ஈறாக மண்டைதீவை நோக்கிய படை நகர்வு சொல்லமுடியாத மனித அழிவுகளையும், அவலங்களையும் விதைத்துச் சென்றது. 105 பேர் இராணுவத்தால் சுடப்பட்டும் வெட்டப்பட்டும் சாவைத் தழுவிக்கொண்டார்கள். இராணுவ வெறியாட்டத்தால் தஞ்சமடைந்தவர்களுக்கு காப்பரண்கள் அவர்களின் கல்லறைகளாக மாறின. எமது இதயங்கள் வலித்தன. தீவகம் அதிர்ந்தது.

சுருவில் அன்னை மரி ஆலயப் பகுதிகள், சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய பகுதிகள் மற்றும் தனியார் வளவுகள் இடம்பெயர்ந்தவர்களால் நிரம்பி வழிந்தது. இராணுவ நகர்வின் போது உலங்கு வானூர்தி சாட்டி சிந்தாத்திரை ஆலயத்தின்மீது வீசிய எறிகணைகளால் மூவர் கொல்லப்பட்டும், பலர் பலத்த காயத்துக்குள்ளானார்கள். மீண்டும் சுருவில் அன்னை மரி ஆலயப் பகுதியை மையமாகக் கொண்டு பல கட்டமைப்பு ஒழுங்குகள் புனரமைப்புப் பெறத் தொடங்கியது. சிதைந்துபோன கல்விப்புல கட்டமைப்பை உருவாக்க ஆசிரியசமூகம் அர்ப்பணிப்புடன் முனைப்புற்றது. புனித அந்தோனியார் கல்லூரி, புனித அந்தோனியார் சிறுவர் பாடசாலை, புனித மரியாள் மகளிர் வித்தியாலயம், பருத்தியடைப்பு, மெலிஞ்சிமுனை பாடசாலைகள் மாணவர்களின் இடப்பெயர்வால் செயலற்றுப் போயின. பௌதீக வளங்கள் அற்ற நிலையில் முன்னர் விமானக் குண்டுவீச்சால் சிதைக்கப்பட்டு கொல்லப்பட்ட திரு. யோனின் வீட்டில் புனித அந்தோனியார் கல்லூரியை மையமாகக் கொண்டு கல்விக் கட்டமைப்பு முகிழத் தொடங்கியது.

மீண்டும் ஒரு புயல் சுருவிலில் மையம் கொண்டது.

புனித அந்தோனியார் கல்லூரியை ஸ்திரப்படுத்துவதில் அதிபர் இரட்ணராஜாவின் தனித்துவமான ஆளுமையை சமூகம் இனம் கண்டது. தீவக கல்விக்கோட்டத்தில் கல்வி அதிகாரியாக அதிபர் இரட்ணராஜா தனது பதவி உயர்வுக் கடிதத்தை அவ்வேளையில் பெற்றுக்கொண்டார். மீண்டும் புயல் சுருவிலில் மையம் கொண்டது. பதவி உயர்வா அல்லது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டான இவ்வேளையில் கல்லூரிச் சமூகத்தை நட்டாற்றில் கைவிடுவதா என்ற கேள்வி மனதில் புயலாக வீசியது.


உரத்துச் சொன்னார்,....... எழுந்து நின்று சொன்னார்...... ஆங்கிலத்தில் சொன்னார். அது அவரது ஸ்டைல் என்போம். இப்படித்தான் சொன்னார்.......

நான் புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபர், எமது பாதுகாவலர் புனித அந்தோனியார். அவர் என்னைக் கைவிடமாட்டார். ஆயர் என்னை நம்பித்தான் இந்த கத்தோலிக்க கல்லூரியைத் தந்தவர். இந்தத் தருணத்தில் நான் கைவிடமாட்டன்.

அடுத்த நாள் காலை அவரை வங்களாவடிச் சந்தியில் கண்டேன்
போறன் பாதர் மன்றாடுங்கோ
நான் சொன்னேன் எல்லாம் நல்லபடியாகும்
இது காலை ஒன்பது மணி இருக்கலாம்
11 மணிக்கு சுருவில் அன்னை மரி ஆலய வளவில் மீண்டும் காண்கின்றேன்.
நான் புதிய பதவியை பொறுப்பு எடுக்கவில்லை
இந்த நேரத்தில் கல்லூரியை விட்டுபோக எனது மனம் கேட்கவில்லை.
பதவி உயர்வு எனக்கு முக்கியமல்ல

பல வேளைகளில் அவரது ஆளுமையை கண்டேன். பல தீர்மானங்களில் அவரது உறுதிமிக்க நெஞ்சைக் கண்டேன். ஆவணி 21ம் திகதி 1991இல் கல்லூரிமீது விமானம் குண்டுகள் போட்டபோது அவரது அழுத முகத்தை கண்டேன். எறிகணைகள் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஏவப்பட்டபோது மாணவர்களை காத்த கரங்களைக் கண்டேன். இறுதியில் புனித அந்தோனியார் கல்லூரிக்காக அவரது இதயத்தின் துடிப்பைக் கண்டேன்.

*அருள்திரு சா. பி. கிருபானந்தன்*
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளப்பரிய ஆளுமைத்திறமை கொண்டவர்

அதிபர் அமரர் எஸ். ஏ. இ. இரட்ணராஜா அவர்களை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். அப்போது பல கோணங்களிலும் அவரின் ஆற்றலை அறிந்துள்ளேன். நான் அவர் பிறந்த மண்ணைச் சேர்ந்தவன். 1989 தொடக்கம் 1993 வரை ஊர்காவற்றுறை கோட்டப் பாடசாலைகளில் கொத்தணி அதிபராக அன்னார் பதவி வகித்தபோது உப கொத்தணி அதிபராக அவருடன் கடமையாற்றியுள்ளேன். அது எனக்கு அற்புதமான அனுபவங்களை அளித்திருந்தது. 1990ம் ஆண்டு இடம் பெயர்ந்த தீவக மாணவர்கள் நாவற்குழி முகாம்களில் வசித்தபோது தற்காலிக கொட்டகைகள் அமைத்து அச்சிறார்களுக்கு கல்வியை வழங்குவதில் என்னுடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர். இதை என்றுமே எமது மாணவச் செல்வங்கள் மறக்கமுடியாது. 1993ம் ஆண்டு தொடக்கம் புனித அந்தோனியார் கல்லூரியில் நான் உப அதிபராக அவர் ஒய்வு பெறும்வரை கடமையாற்றி யுள்ளேன். அக்காலப்பகுதியில் இவரின் சாலச் சிறந்த பண்புகளை நான் நன்கறிவேன். நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட நோக்கும் கொண்டவர். மலைபோல பிரச்சனைகள் வந்தாலும் தனது அளப்பரிய ஆளுமைத்திறமையால் அதைத் தீர்க்கும் வல்லமை கொண்டவர். தனது கல்லூரி ஆசிரியர்களின் இன்ப துன்பங்களில் பங்குகொண்டு ஒரு தந்தையைப் போலவும் சில சமயம் நண்பனாகவும் வாழ்ந்து வழிகாட்டினார். மாணவர்களை அன்பாலும் கண்டிப்பாலும் வழிநடத்தி அவர்கள் வாழ்க்கையில் முன்னேற ஒரு உந்துசக்தியாக விளங்கினார். அவர் நல்ல கலைஞன், சிறந்த சமூக சேவையாளரும் கூட. இவர் தலைமையில் நாங்கள் வருடாவருடம் கொண்டாடிய எங்கள் கல்லூரி தினத்தை எம்மால் மறக்கவே முடியாது.

இவர் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு இவரின் பிரிவால் துயர் கொண்டுள்ள இவர் மனைவி பிள்ளைகள் உற்றார் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை காணிக்கையாக செலுத்துகிறேன்.

*க. இரத்தினசிங்கம்*
முன்னாள் அதிபர் புனித அந்தோனியார் கல்லூரி,
முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி
ஊர்காவற்றுறை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் கொடுத்த உத்தம புருஷன்

திரு. S.A.E. இரட்ணராஜா மாஸ்ரர் பிறந்த மண்ணைப் பெருமைப்படுத்திய ஒரு பெரியார். தனது மண்ணைப் பெருமைப்படுத்திய ஒரு பெரியார். சிறு பராயத்திலிருந்தே தனது மண்ணையும், மக்களையும் நேசித்த ஒருவர்.

1960 இல் நான் அருள்திரு S. பீற்றர் அ.ம.தி சுவாமியார் அவர்களுடன் இருந்த காலத்திலும் அதற்கு முன்பிருந்தே கரம்பொன் பங்கின் குருவானவர்களுக்கு ஒரு வலக்கரமாக இருந்து பணியாற்றிதை நன்கு அறிவேன். மேலும் S. பீற்றர் முஆஜ சுவாமியாரின் இறுதிவேளையிலும் அவரை வைத்தியசாலைக்குத் எடுத்துச் சென்றவர் மாத்திரமின்றி அவர் மாரடைப்பில் அவஸ்தைப்பட்ட போது திரு இரட்ணகிளி, ஓவசியர் அந்தோனிப்பிள்ளை நீதிவான் இரஜேந்திரம் அவர்கள் ஸ்ரெச்சரில் வைத்து பெரியாஸ்பத்திரியின் மேல்மாடிக்குத் தூக்கிச் சென்றது இன்றும் கண்முன்னே நிழலாடுகின்றது. தனது இறுதிவேளைவரை பீற்றர் சுவாமியாரின் செபமாலையை தன்னுடனேயே வைத்திருந்தார். அதன்மூலம் தான் அடைந்த நன்மைகளையும் புதுமைகளையும் பற்றி நான் அவரை சந்தித்த வேளைகளில் சொல்லி அருள்திரு S. பீற்றர் அவர்களின் புனிதத்துவத்தையும், தியாக வாழ்வையும் பணியையும் பற்றி கூறி என்னை என்றும் உற்சாகப்படுத்தி உறுதியூட்டியவர்.

தனது அந்தோனியார் கல்லூரியின் அதிபராக பல ஆண்டுகள் சிறந்த பணியாற்றியவர், கல்லூரி அரசினால் சுவீகரிக்கப்பட்ட வேளை அதை தனியார் கல்லூரியாக வைத்திருக்க பெரும் முயற்சி எடுத்தவர். அது கைகூடாமல் போனபின்னும் அக்கல்லூரி ஒரு குருவானவரின் அதிபர் பதவியிலேயே இருக்க வேண்டும் என்று தான் ஓய்வு பெற்ற பின்னரும் பெரும் முயற்சி எடுத்து இயேசுதாசன் அடிகளாரை அக்கல்லூரியின் அதிபராக்கினார்.

இடம் பெயர்வின் பின் தனது இறுதிக் காலத்தை புனித செபஸ்தியார் ஆலய பராமரிப்பு பணியிலும், மக்களுக்கு ஒரு சிறந்த தலைவனாகவும், கிராமத்தின் மூத்த உறுப்பினராகவும் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள தமது வீட்டிலிருந்து செயலாற்றினார். தமது கடைசி காலத்தில் ஒரு குருவானவரையும் செபஸ்தியார் ஆலய அறை வீட்டில் குடி அமர்த்தி அதற்கான ஆவன செய்து தமது வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.

அருள்திரு பொனிவேஸ் F. பஸ்ரியாம்பிள்ளை

இளவாலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்பற்று மிக்க

# மதிநுட்பம் நிறைந்த சேவையாளன்

தீவக தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் முதல் பல அறிஞர்களைப் பெற்றெடுத்த புண்ணிய பூமி. சிறந்த சேவையாளரை ஈன்றெடுத்த சிறப்பு மிக்க பிரதேசம். அந்த வகையில் அமரர் இரட்ணராஜா முன்னாள் புனித அந்தோனியார் கல்லூரி அதிபரும் கல்விச்சேவை செய்த பெருந்தகை.

வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கையை வாழ்வதற்காக பிறந்த மண்ணைவிட்டு அடிமைகளாக வாழ்வதிலும் பார்க்க பிறந்த மண்ணிலேயே சாக வேண்டும், அந்த மண்ணின் மக்களுக்காக சேவை செய்ய வேண்டும் என இறுதிவரை சேவை செய்தவா அமரராவார்.

நான் 1992ம் ஆண்டிலிருந்து அவருடன் பழகியவன். என்றும் செந்தளிப்பான முகத்தையுடையவர். கடுமையான கல்விச் செயற்பாட்டையும், குழந்தை மனப்பாங்கையும் கொண்டவராக நான் கண்டேன்.

இடம் பெயர்ந்து ஊர்காவற்றுறை மாணவர்கள் அல்லல்பட்ட வேளையில் அப்பகுதிப் பாடசாலைகளைக் கொண்ட கொத்தனி முறையில் முழுப்பொறுப்பையும் எடுத்து தனது ஆளுமையால் அப்பகுதி மாணவர்களுக்கு கல்விச் சேவை செய்தவர்.

தனது ஆசிரிய குழாமுடன் மிகவும் அன்பாகப் பழகி, கடமையில் கடுமையைக் கடைப்பிடித்து பல மாணவர்களை உயர்கல்வி பெற வழி செய்தவர். தனது கல்விச் சேவையில் கடந்த 20 வருடங்களாக புனித அந்தோனியார் கல்லூரி அதிபராக இருந்து கல்லூரி முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்தவர். 1995ம் ஆண்டு ஓய்வு பெற்றபொழுது வெளிநாட்டு வாழ்வை உதறித்தள்ளிவிட்டு தனது பிறந்த ஊரான ஊர்காவற்றுறையில் இறுதிவரை வாழ்ந்து மண்ணோடு மண்ணாகக் கலந்து, அம்மண்ணில் இறவா மனிதனாக எட்டிநின்று பாா்த்துக்கொண்டே இருக்கிறார். அவர் பண்பு, குணம், சேவை மனப்பான்மை, கடமையுணர்வு எமக்கு வழிகாட்டிநிற்பதுடன், அவர் எமது நினைவில் நீங்கா உத்தமனாக என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

அவருடைய குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

ஓம் சாந்தி , சாந்தி சாந்தி

**கலாபூசணம் செல்லையா மெற்றாஸ்மயில**
நிர்வாக உத்தியோகத்தர்
தீவக வலயக் கல்வி பணிமனை
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய உலகில் எனது முதல் அதிபர்

நான் ஆசிரிய உலகிற்கு முதன் முதலாக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் காலடி எடுத்து வைத்தபோது, என்னை வரவேற்ற மாமனிதர் அக்கல்லூரியின் அதிபராக இருந்து, தற்போது அமரராகிவிட்ட எஸ். .ஏ. இ. இரட்ணராஜா அவர்கள் ஆவார். நான் குறுகிய காலம் அவரின் கீழ் சேவையாற்றினாலும், பல்வேறு வகையான அனுபவங்களைப் பெற்று, நீண்டகாலம் பழகியுள்ளதாகவே உணர்கிறேன்.

நிமிர்ந்த நடையும், கம்பீரமான தோற்றமும், சிறந்த ஆங்கிலப் புலமையும், விளையாட்டில் தேர்ச்சியும் கொண்ட நமது அதிபர் காலைவேளை நேரத்துடனேயே பாடசாலைக்கு சமூகமளித்து விடுவார். அவரை தரிசனம் செய்யாது உள்ளே நுளைந்த நாட்கள் அரிது. ஏனெனில் அவர் லீவு எடுப்பது அபூர்வம். காலை பிரார்த்தனையில் “இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ...” என ஆரம்பிப்பதும், பாடசாலையை, வகுப்பறையை மேற்பார்வை செய்வதும் ஆங்கில உரையாடலும் இன்னும் கண்முன்னே நிற்கிறது.

வேலணை, ஊர்காவற்றுறை கோட்டங்களின் அதிபர் சங்கத்திற்கு தலைவராக இருந்து முத்தமிழ் விழா, கல்வி அதிகாரிகளின் பிரிவுபசார விழா, நூல் வெளியீடுகள், எழுச்சி நாள்கள், பேரணிகள், வினாவிடைப் போட்டிகள், தமிழ், ஆங்கில மொழித் தினம் என என்ன நிகழ்வானாலும் முன்னின்று நடத்தியவர்.

இவரது பாரியாரும் எமது கல்லூரியில் கல்வி கற்பித்தவர். அவர் சைவத்தில் பிறந்தாலும் திருமணத்தின் பின் கத்தோலிக்க சமயத்தை முழுமனதுடன் தழுவியவர். “பாதுகாவலன்” பத்திரிகையில் இவரது ஆக்கங்களைப் பார்க்கலாம். அதிபரின் தன்னலமற்ற சேவைக்கு பாரியாரின் பக்க பலமே முக்கிய காரணியாகும். கல்லூரி தினம், அந்தோனியார் பெருநாள், இவர்களின் கல்யாண நாள் எல்லாம் ஒரு நாளாக அமைந்தது. இவர்களுக்கு ஒரு சிறப்பாகும். இவர்களுடைய 3 புதல்விகளும் நல்வாழ்க்கை பெற்று வாழ்கின்றனர். அமரர் அவர்கள் தனது பேரப்பிள்ளைகளின் அளவளாவி பேரின்பம் கண்டவர்.

அவரின் கீழ் சேவையாற்றிய காலத்தில் என்னிடம் பல பொறுப்புக்களை ஒப்படைத்து பல அனுபவங்களையும் மனோதிடத்தையும் பெற வழிசமைத்தவர். அமரர் அதிபராக மட்டுமல்லாது நண்பனாகவும், நல்ல ஆலோசனை கூறுபவனாக வும் செயற்பட்டார். “பிள்ளை சாரதா” என்று அழைப்பது, இப்பவும் கூப்பிடுவது போல் உண்டு. அவர்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழக எனக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. கோபம் வந்தால் அவரது முகம் செக்கச் சிவக்கும். கைவிரல் துடிக்கும். எல்லாம் தரமானதாக பெரிய அளவில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதாக நிறைவேறுவதே அவரது விருப்பம். அதேபோல, அவரது சேவைநலன் பாராட்டு வைபவம் கோலாகலமாக நடந்தேறியது. 1996 காலப் பகுதியில் நான் அவர்களுடன் வீட்டில் தங்கியிருந்ததால் இன்னும் பல அனுபவங்களைப் பெற்றேன்.


மேலும் ஓய்வு பெற்ற பின்னர் தனது சொந்த மண்ணில் வந்து பல சமூகத் தொண்டுகள் மேற்கொண்டார் அமரர் அவர்கள். குழந்தைகளின் நலன்கருதி சிறுவர் பாடசாலையை (முன்பள்ளி) நடத்தி கண்காணித்து வந்தார். கல்லூரியைவிட்டு ஓய்வு பெற்றபோதும் அதில் கண்ணாகவே இருந்தார். இறுதிக் காலங்களில் அந்தோனியார் கல்லூரி மாணவர்களின் கற்றல் அடைவு போதாது எனக் கவலைப்பட்டார். சமயத் தொண்டே பெரும் தொண்டெனக் கருதி செபஸ்தியாருக்கு சேவைகள் பல செய்தார். சொந்த மண்ணிலேயே வாழவிரும்பி வசதியுள்ள வெளிநாடுகளுக்கு, பிள்ளைகளிடம் செல்லாது, கடைசிக் காலத்திலும் இவ்வாழ்க்கையை வாழ்ந்தார். இறுதியில் ஒருநாள்கூட படுக்கையில் வருத்தம் என்று படுக்காது, வைத்தியசாலைக்குச் செல்லாது, தனது பூவுலக வாழ்வை நீத்து செபஸ்தியாருடன் தன்னை இணைத்தக் கொண்டார். இத்தகைய பேறு கிடைப்பது அரிது.

இவ்வாறு தன்னலமற்ற சேவை மனப்பாங்குகளும் அர்ப்பணிப்பும் கொண்ட மாமனிதர் இன்று எம்முடன் இல்லை. அவருடைய குடும்பத்தாருக்கும் சமூகத்திற்கும் இது ஓர் பேரிழப்பாகும்.

**"பிறந்தவர் யாவரும் இறப்பது திண்ணம்".**

அவருடைய ஆத்துமா சாந்தியடைய புதுமைப் புனித அந்தோனியாரைப் பிரார்த்திப்போமாக.

*செல்வி சா. வீரசிங்கம்*
முன்னாள் ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி
உதவி கல்விப்பணிப்பாளர் (கணிதம்)
தீவகக் கல்வி வலயம்
வேலணை



# பணியில் நிறைந்த உத்தமருக்கு உள்ளம் நிறைந்த அஞ்சலி

அமரர் இரட்ணராஜா சிங்கநாயகம் அவர்களை 1992-1995ம் ஆண்டு வரை அறியும் வாய்ப்பைப் பெற்றேன். இடம்பெயர்வு காரணமாக புனித அந்தோனியார் கல்லூரி சென். ஜோன்ஸ் அக்கடமியில் இயங்கியது. அப்போது இக்கல்லூரி அதிபராக இவர் விளங்கினார். அப்போதுதான் இவரின் சிறந்த குணநலன்களை அறியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டிற்கமைய பாடசாலை நிர்வாகத்தைத் திறம்பட நடத்தினார். நேர்மையின்படி நடப்பவர். நியாயத்திற்கு அடிபணிபவர்.

மாணவர்களுக்கு உற்சாகம் கொடுத்து திறமையாளராக கல்வி கற்க ஊக்கமாய் நின்று உழைத்த உத்தமர். தனது மனதில் உள்ளக் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுபவர். பாடசாலைகளில் நடக்கும் தமிழ்த் தினப்போட்டி, பண்ணிசைப் போட்டி, கலை நிகழ்ச்சிகள் என்பவற்றில் மாணவர்களை சிறந்த முறையில் பங்கு பெறச்செய்து அவர்களை வெற்றியீட்டச் செய்தார்.

தீவகப் பாடசாலைகள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருந்தது. அப்போது இசைவிழா எல்லாக் கோட்டப் பாடசாலைகளும் கட்டாயமாக வைக்க வேண்டுமென கல்விப்பணிப்பாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளை தானே முன்னின்று நடத்தி மற்றைய மாவட்டங்கள் எல்லாவற்றிலும் முதலாவதாக தீவகமே விழாவை சிறந்த முறையில் நடத்தி பலரின் பாராட்டை பெற்று தீவகத்திற்கு பெருமையைத் தேடித் தந்துள்ளார்.

அன்பு, இரக்கம், உயர்ந்த சிந்தனை, பொதுநல நோக்கமுடைய அமரர் அவர்கள் மரணத்திற்குப் பின்பும் வாழ்கிறார். அன்னாரது மறைவிற்கு பின் துன்ப துயரத்தில் மூழ்கியிருக்கும் அன்பு மனைவி, பாசமிகு மக்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரின் ஆத்துமா சாந்தியடைவதாக.

*திருமதி. ஸ்ரீ. இராமச்சந்திரன்*
உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்)
தீவகக் கல்வி வலயம்.
வேலணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூரின் முன்னோடித் தவப்புதல்வர்

காவலூர் பெற்றெடுத்த காத்திரமான மனிதர்களில் காலஞ்சென்ற எஸ்.ஏ.ஈ இரட்ணராஜா அவர்கள் முக்கியமானவர். கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய பங்குப்பிரதேசத்தில் வளமான குடும்பத்தின் புத்திரராக 1935ம் ஆண்டு பிறந்தவர். ஆன்ம ஈடுபாடும் அறிவு கல்வி மேம்பாடும், நல்லொழுக்க சீலமும், கருணை, கண்ணியம். கட்டுபபாடும, கணடிபபும, நோ்ததியான சிநதனாசகதியும அழகான தோறறப பொலிவும வாய்க்கப் பெற்றவர். அன்பால் யாவரையும் தன்பால் ஈர்த்து வைத்திருக்கும் அபார சக்தி அவரது ஆளுமைக்கு சிகரம் வைத்ததைப் போன்றது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் அசிரியராகவும் அதிபராகவும் நாற்பதாண்டுகள் ஆற்றிய கல்விப்பணி தீவகத்தின் கல்வி வரலாற்றில் உறுதிபடப் பொறிக்கப்பட்டுள்ளது. அவரது கல்விப்பணியால், பயனடைந்த மாணவ, ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலைச் சமூகத்தினர் யாவரதும் உள்ளத்தில் நீங்காத இடம்பெற்றிருக் கின்றார்.

கிராமத்தின் மீதும் தீவகத்தின் மீதும் குன்றாத பற்றும் பக்தியும் கொண்டவர். அதன் காரணமாகவே 1990ம் ஆண்டு இவ்வூர் மக்கள் பிரதேசத்தை விட்டு வெளியேறியபோதும் 1996ம் ஆண்டு மீண்டும் கிராமத்திற்கு வந்து குடி அமர்ந்து தாய் மண்ணில் பாகப்பிணைப்பில் கட்டுண்டு தன் இறுதி மூச்சுவரை வாழ்ந்து தன் புகழுடலை தாய் மண்ணிற்கே ஒப்புவித்தார்.

சகலரதும் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய அதிபர் அவர்களோடு ஆறு ஆண்டு களுக்கு மேல் ஆசிரியராக உடன் பணியாற்றுகின்ற அரியவாய்பின் மூலம் அவரோடு நெருங்கி உறவாடும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அந்த வேளையில் பல தடவை அவரது ஆளுமைகளையும், ஆற்றல்களையும், அற்புதமான பண்புகளையும் சிறந்த தலைமத்துவத்தையும் தரிசனம் செய்தேன். சிறந்த இல்லத் தலைவராக ஆளுமை மிக்க அதிபராக, பற்றுமிக்க கிராமத்தலைவனாக, சிந்தனையிலும் செயலிலும் முன்னோடி மனிதராக தீவகத்தின் தவப்புதல்வராக எழுபத ஆண்டுகள் வாழ்ந்து புனித செபஸ்தியார், புனித அந்தோனியாரது பக்தனாகத் தொண்டனாக அமர்ந்து நிறைந்துள்ளார். அவரது ஆன்மா சாந்தியடையவும், துணைவியாருக்கும், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரதும் நல்வாழ்வில் தோன்றா ஒளிவிளக்காக அவரது ஆன்மா பிரகாசிக்க வேண்டுமென இறைவனை பிராத்திக்கின்றேன்.

*த. தர்மராஜா*
ஆசிரிய ஆலோசகர்
தீவக வலயக் கல்விப் பணிமனை
வேலணை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM

## KAYTS ST. ANTHONY'S COLLEGE OLD STUDENTS' ASSOCIATION (UK)

164 Burnt Ash Lane, Bromley, Kent BRI 5BU United Kingdom
(00 44) 208 857 1887

30 May 2004

We are saddened to hear of the loss of an important individual of St. Anthony's College, Mr. S. A. E. Rntnarajah.

As a prominent figure in the history of St. Anthony's College, Kayts, and being a patriot of Karampon, he dedicated his life to the well-being of the college. He held the position of principal for 19 years of which during that time, the college saw many changes, one of the most fundamental being that St. Anthony's became a co-educational college in 1978.


Mr. Ratnarajah, a person whose character was full of energy and enthusiasm for the college, was held in high regards by all his students.

His sudden departure has shaken Antonians around the world and we believe all past students will join us in giving our heartfelt condolences to his family.

May he rest in peace

*M. J. Philomin*
(President)

*A. B. Inbarajan*
(Secretary)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST. ANTHONY'S COLLEGE-KAYTS
# OLD BOYS' ASSOCIATION
# CANADA

On behalf of the Old Boys Association of St Anthony's College-Kayts (Canada), our executive committee and the members of our association wish to express our deepest sympathies and prayers to the family of the late Mr. S.A.E. Ratnarajah (also known as Ratnakili master).

We learned about his death on May 20th, 2004 and we were in shock over his departure from this world. He was a person who devoted his entire life to our community. He dedicated his whole life to our Alma Mater in a most difficult period. He had been the Principal of our College for twenty years and had contributed to the development and growth of our College.

One did not have to know our Ratnakili Master personally to realize how much he would be missed and mourned in the Island of Kayts, to which he did so much. All of us will agree that he will always be remembered in the history of the island of Kayts, as the central figure who brought the College and St. Sebastian's Church to their former glory with his leadership and courageous actions.

To extend our sympathy and our pledge of prayers for his loving wife and daughters is but a small show of solidarity in such a sorrowful time.

May God strengthen them with his love and grace. May they find comfort in the blessed hope of our Lord's coming and the resurrection to eternal life of all who loved him.

Memories keep the one you loved,
close to you in spirit and thought
and always in your heart,
today and forever.

with sincere sympathies

*M. Anton Thavarajah*
President

June 08, 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்க தென் இலங்கைக் கிளையின்

# அனுதாபச் செய்தி

அமரர் S.A.E. இரட்ணராஜா அவர்களின் திடீர் மறைவு எம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. காவலூர் மாண்புமிக்க ஒரு முன்னோடித் தலைவனை இழந்துவிட்டது. புனித அந்தோனியார் கல்லூரி அதன் பிரமாணிக்கமுள்ள பணியாளனை இழந்துவிட்டது. கரம்பொன் ஊர் கண்ணியமுள்ள கனவானை இழந்து தவிக்கின்றது. கரம்பொன் பங்கு மக்கள் அர்ப்பணிப்போடு ஆலயப் பணியாற்றிய பங்குத் தலைவனை இழந்துவிட்டது.

கல்வி உலகு மகத்தான பணிகளாற்றிய சிறந்த ஆசிரியரை, பண்பான மாபெரும் அதிபர் திலகத்தை, தன்னலமற்ற தியாகப் பெருமகனை இழந்துவிட்டது. மாணவர் சமுதாயம் ஒப்பில்லாத ஆசானை, தன்னிகரற்ற ஒரு அதிபரை, அன்பான வழிகாட்டியை இழந்து கலங்குகின்றது.

ஆசிரியராக, அதிபராக, கொத்தணிப் பாடசாலை அதிபராக, ஆர்வமும், ஆற்றலும் ஆளுமையுங் கொண்ட தலைமைத்துவப் பண்புகள் கொண்ட ஒரு கனவானாக வாழ்ந்த பெருந்தகை "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற முதுமொழிக்கு இலக்கணமாக இறுதி மூச்சுவரை வாழ்ந்து மறைந்த இந்த மாமனிதனுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அவரது ஆன்மா இறைவன் திருவடிகளில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

துயர் பகிரும்

**பழைய மாணவர் சங்கம்**

தென் இலங்கைக் கிளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிவரை மண்ணை நேசித்தவர்

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அதிபர் இரட்ணராஜா அவர்கள் மறைந்து ஒரு மாதமாகிவிட்டது. அவரை நான் கடைசியாக சந்தித்து இரண்டு மாதங்களாகிவிட்டது. எங்கோ வெளிநாடு சென்றிருக்கிறார். வந்ததும் சந்திப்போம் என்ற மன வேதனை. சகோதர உணர்வோடு வாரத்தில் நான்கு நாட்களாவது சந்திப்போம். பலதையும் பேசுவோம். இப்படியாக கரம்பொனின் நிரந்தர பிரஜைகள் வரிசையில் இந்த மண்ணை நேசித்தார். அவருடைய இறுதி மூச்சு இந்த மண்ணுக்கே சொந்தமாயிற்று.

புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் கடமை புரிந்த காலங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் சாதுரியமாக கையாண்டு மன உறுதியுடன் பணியாற்றிய பெருமை அவரைச் சார்ந்தது. 1988 இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் அமைதி காக்கும்படை வந்தமை, 1991ம் ஆண்டு தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்தமை, இக்காலத்தில் கொத்தணி அதிபராகக் கடமையாற்றியதனால் அவருடைய அதிபர் பணியின் முக்கியமான காலகட்டமாகும். பாடசாலை நேரங்களில் ஷெல் தாக்குதல் விமானத்தாக்குதல் போன்றவற்றிலிருந்து தப்புவதற்கு பயிற்சிகளையும் மாணவர்களுக்கு அவ்வப்போது வழங்கி பாதுகாத்து அறிவுபுகட்டி வழிநடத்தினார். மாணவர்களுக்கு மட்டுமல்ல கரம்பொன் மக்களுக்கும் ஆயனுக்குப்பின் செல்லும் ஆடுகள்போல் 1991ம் ஆண்டு தீவகத்தில் இராணுவமுன்னேறுதல் காரணமாக சித்திரை மாதம் 25ம் திகதி இரவோடு இரவாக சுருவில் அன்னை மேரி மாதா கோவிலிலிருந்து யாழ்ப்பாணம் நடை பவனியாகச் சென்றது எமது மனக்கண்ணில் பதிந்திருக்கின்றது. இடம் பெயர்ந்து சென்ற இடங்களிலெல்லாம் வசதிக்கேற்ப பாடசாலைகளை அமைத்து 11 பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து மீள இயங்கவைத்த பெருமை கொத்தணி அதிபராக இருந்த அக்காலகட்டத்தில் அவரையே சார்ந்தது. அதிபராக இருந்து இளைப்பாறிய பின்பும் கல்வித் திணைக்களத்தில் பணியாற்ற அழைத்திருந்தும் அதில் நாட்டமின்றி சமூக சேவைகள் ஆலயப்பணி என்பவற்றில் தனது ஓய்வுக் காலத்தை அர்ப்பணித்தார்.

புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கிளைகளை வெளியிடங்களில் ஆரம்பித்து தன்னுடைய சேவைக் காலத்தில் முயற்சிகளை மேற்கொண்டார். அதில் முக்கியமானது தென்னிலங்கையின் கிளையை 1973ம் ஆண்டு கொழும்பு சென்று பழைய மாணவர்கள் பலரையும் சந்தித்து அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அவர்கள் மூலமாக பல நாட்டுக் கூத்துக்களை 'ஞானசௌந்தரி' நாடகத்தை கொழும்பு பழைய மாணவர்களால் நடிப்பித்து மேடை ஏற்றியதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது அன்பு மனைவிக்கும், பிள்ளைகள் குடும்பத்தினருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.



**வ. அஞ்சலோ**

**தலைவர் பழைய மாணவர் சங்கம்**

**ஊர்காவற்றுறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Antonian Old Boys in Canada


Flanked by daughters, Sons in Law and Grandchildren





St.Antony's College bids farewell - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



St.Antony's Band at the Funeral Procession



Final Respects at Karampon Grotto



Final Blessing by the Bishop at St.Sebastian's Church

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*He will remain as an inspiration ...*


# TRIBUTE FROM

# KARAMPON PARISHIONERS OF CANADA

Mr. Ratnarajah was born to a catholic family in Karampon, Kayts, and nurtured in catholic environment surrounded by many Hindu friends who lived in Karampon. Upon completion of his secondary education at St Anthony's College, Kayts, he proceeded to South India and completed his bachelor degree in 1957. On return, Mr. Ratnarajah was the first native graduate teacher to be appointed at St Anthony's College. Soon, he became the contemporary and visionary teacher and with compassion and genteel counseling motivated many students to continue their education amidst of hardship and complex challenges. His enthusiasm and encouragement motivated several students to excel in their studies as well as in sports. Since 1970, Mr. Ratnarajah was the lead caretaker of his parish church St. Sebastian at Karampon and also served as the chief community counselor in all church activities.

In 1976, he was appointed as the principal of the St. Anthony's College, the first layman to the position after a century of administration by catholic brothers and priests. Although the college was founded by the catholic missionary in 1876, it continued to provide education to Hindu students from all surrounding villages. For the next 20 years, Mr. Ratnarajah continued his courageous leadership to the students, parents, teachers, and the public at Karampon and Kayts. A few among many salient achievements are:

- The first time in 1976 girls were admitted to the century old all-boys college in the advanced level classes.
- Qualified women teachers were appointed in the staff.
- The college was upgraded to Class 1 School in the Kayts AGA division.
- St. Anthony's college was recognized as the most popular and core school in the islands cluster school system.



During the dangerous civil war period 1990-1995 [when Kayts and Karampon were bombarded], people abandoned their houses and fled for life in all directions. Mr. Ratnarajah acted as a shepherd and guided the students, parents, and teachers to deep village Suruvil and continued



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

education in private residences. Later, when those villages were targeted for state sponsored destruction, people fled to the Jaffna city. He gathered them and operated St Anthony's College first at the Jaffna Central College, and later at the St. Johns Academy. In 1995, when Sri Lankan government took control of the Jaffna city, people returned to demolished residences at Karampon and Kayts. Mr. Ratnarajah retired from his long dedicated educational services and returned to his home at Karampon. Since then he took charge of the protection of St. Sebastian Church and property in the absence of resident parish priest.

Although all three of his children are living in Canada and London, Mr. Ratnarajah and his wife Bhuvaneswari remained at home and lived their retirement life as the sole source of strength to the few parishioners now living around St. Sebastian Church at Karampon. In 2000, he visited Canada and London, met college alumni and former Karampon parishioners and sought help to rebuild the church rectory to accommodate a resident priest. Throughout his long and arduous journey, his wife of 42 years never left him alone, continued to be his sole companion until the glorious flame extinguished in May 2004.

Mr. Ratnarajah's dedicated services to St. Anthony's College and St. Sebastian Church will remain as 'an inspiration' to thousands of College alumni, and Karampon residents now living all over the world today.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம்பொன் பங்கு மக்களின் அஞ்சலி

கரம்பொனூர் உதித்த செம்மல்
அருந்தவப் புதல்வன் பேராசான்
மறைந்திட்ட அமங்கலச் செய்தி கேட்டு
பரந்து வாழ் பங்குமக்கள் பணிவான
பழைய மாணவர், நண்பரெலாம்
மறைந்திடாக் கவலையில் மூழ்கினரே.
தனக்கிடர் வந்த போதும்
உளமதில் உரங்கொண்டாங்கே
பெறற்கரும் கல்விப்பணியே
பெரும் பணி என்றே போற்றி,
இடம் பெயர்ந்தெம் மக்கள்
தடம் பதித்திட்ட ஊர்கள் தோறும்
கொத்தணிப் பாடசாலைகள்
செவ்வனே இயங்கச் செய்தார்
காவலூர் சந்நந்தோனி கல்லூரி
தரணியில் தழைத்து ஓங்கிடவே
ஒப்பரு சேவைஆற்றிய பெருந்தகை.
கரம்பொன்னுக் கணியாய் இலங்கும்
புனித செபஸ்தியார் ஆலயத்தைக்
கண்ணெனக் கருத்துப் போற்றிய கனவான்
இன்னல்கள் சூழ்ந்து இடர் மிகு நாட்களில்
தன்னந்தனியே ஆலயப்பணி செய்தபெரு மகன்
இறை குலம் போற்ற வாழ்ந்திட்ட திருமகன்.
ஆலயத்தருகமர்ந்து அயர்வின்றி பணி செய்தார்
எழிலுடன் புனித கோவில் நிலைத்திடச் செய்து
நாற்பது ஆண்டுகள் ஆலயப்பணிக்காய்
அர்ப்பணித்திட்ட பங்குமகன்.
நம்மிடை நின்று பிரிந்தமை பேரிழப்பாமே
இடி விழுந்தாற்போல் மனம் உடைந்துள்ள
அருமை மனைவி, அருந்தவப் புதல்வியர்
அருமந்த சோதர சோதரிகட்கும்,
உற்றார் உறவினர் யாபேருக்கும்
உளம் நெகிழ்ந்துரைக்கும்
அனுதாபங்களை பங்குமக்கள் சார்பாக
சமர்ப்பணம் செய்கின்றோம்



ஆக்கம் : எல. எம். ஜெ.

கரம்பொன் பங்கு மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AN INESTIMABLE TREASURE

The entire Kaytians were steeped in profound sorrow by the demise of S.A.E. Ratnarajah fondly called as "Ratnakili" a household word in the entire Island of Leyden. As a pedagogue of repute for 40 years and an exemplary principal for 20 years at St. Anthony's College, Kayts he was instrumental in shaping the destinies of hundreds of his charges who are holding positions of trust responsibility and eminence in educational political and evangelical fields.

He was a man of many parts. He was an educationist , a dramatist, a soccer coach, a technician and a social worker. His love for his school kept him bound hand and foot in Kayts. He got his promotion to the S.L.E.A.S grade by dint of hard work and distinction, He retired as a principal of S.L.E.A.S grade l-an attainment that would have positioned him as the Provincial. Director of Education North East province. But he was content with a principalship that gave the opportunity to proffer his excellence to his school and country.

He was a staunch catholic St. Sebeatian church Karampon was his second home. He firmly believed that education that does not take the initiative in arousing the spiritual values of life is no education worth the name for it gives knowledge but not wisdom. Therefore he spent his leisure hours in helping the Karampon parish priest in arousing spiritual values of life, discipline love and compassion among the parishioners. It is said that he took the rode of St. Sebestian in a drama held in the church. Showers of praise for his acting poured in torrents. The third day after the drama he got a letter appointing him as the principal of St. Anthony's College, Kayts - a post held by catholic Brothers and Fathers for ages.

He was the first layman to be appointed as the principal of this prestigious school. Believe it or not the people of Kayts and Karampon still believes that the principalship was a reward of St. Sebestian for the role he played in that unforgetable drama.
Time has proved that the resplendent mantle that descended on the shoulder of Ratnakili had elevated the versatility of his erudition and the transparancy of his forthright actions.
As a sportsman and coach he was the President Kayts Rangers club, Anna Munetra Sports Club and the Kayts Hockey club. St. Anthony's college reached its meredian splendur during the time he was the principal of the college.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Although unobtrusive by nature wherever he was, his subdued personality exuded an aura of distinction which made his presence felt. His unostentatious and selfless services to the student community in particular and to Kayts in general will be remembered with gratitude by the student community old students and his friends.

The crowd that thronged at his funeral and the panegeric mouthed by those dear to him and the clergy were indelible expressions of love and gratitude they had for the Gem they have lost. They all have lost *a* treasure inestimable and so I have.


*S. Kathirgamathamby*
Former Teacher ASC
President, Journalist Association,
Northern Sri Lanka

## கரம்பொன் மகாராசா

| | | |
|---|---|---|
| இலங்கைக் கிறிஸ்தவ உலகின் இராசதானி | – | கரம்பொன் பங்கு |
| சூழவுள்ள பங்குகள் | – | நாரந்தனை, ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை சுருவில் பங்குகள் |
| கரம்பொன்னில் ஒரு மகாராசா | – | எஸ். ஏ. இ. இரட்ணராஜா |
| மகாராணி | – | புவனேஸ்சரி அம்மா |
| வம்சம் | – | ஆண்டகை வம்சம் |
| அரண்மனை | – | புனித அந்தோனியார் கல்லூரி |
| துறைமுகம் | – | ஊர்காவற்றுறை |
| அந்தப்புரம் | – | Blue Heven |
| தலங்கள் | – | புனித செபஸ்தியார், புனித அந்தோனியார் கோயில்கள் |
| ஆட்சி ஆரம்பம் | – | 01–04–1976 |
| ஆட்சி நிறைவு | – | 27–05–1995 |
| ஆட்சி வகை | – | மக்களால் ஏற்றுக் ஏகொள்ளப்பட்ட சர்வாதிகாரம் |
| கண்கண்ட சாட்சிகளில் ஒருவன் | – | சு. கலாதரன் |

முன்னாள் அதிபர்
சேர்.வை.து. மத்திய மகா வி.
வேலணை.

**நன்றி : உதயன் 25-05-1995**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRIBUTE FROM
# A FORMER MEMBER OF THE STAFF

Late Mr.Ratnarajah does not need any introduction as he was well known among the Kayts and the Jaffna community. His sudden passing away left everyone who knew him greatly shocked and deeply saddened. He was a man of many parts. During his tenure of office as teacher and principal of St. Anthony's, he was greatly respected and very much admired by his colleagues and students. He steered the school through its difficult periods and worked hard to maintain the high level of performance established by his predecessors. He had the honour of being appointed the principal of Kayts cluster schools. With all these responsibilities in his hands, his retirement left a big gap that was difficult to be filled. But he never retired from active service to his parish, to the Kayts community, the society at large and helped the school from outside. He was a tower of moral and physical strength to everyone around him, to his friends and relations abroad, and most of all a helper to the poor and destitute. He served St.Sebastian with such passion, that to many, it was hard to believe. He lived a useful and fruitful life and in his final hours of his life he would have said with St.Paul "I have done my best in the race, I have run the full distance, and I have kept the *faith* and now there is waiting for me the prize of victory." We know that the reward is so glorious that no eyes have seen or ears have heard what the Lord has for those who love Him. Now he is in the hands of God - as he has always been.

*Mr. M. Victor Philip*

(Retired Teacher)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண்ணை மிக ஆழமாக நேசித்த கண்ணியம் மிக்க கனவான்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியை முந்தியிருக்க செய்வதற்கு தன் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்த அதிபர் எஸ்.ஏ.இ. இரட்ணராஜா அவர்கள் அமரத்துவமடைந்த செய்தியை பத்திரிகையில் பார்த்தபோது நம்ப முடியவில்லை. ஒரு கணம் அதிர்ச்சி. கம்பீரமான அவரது தோற்றம் இன்னும் கண்ணுள் நிழலாடுகிறது. செய்தி நிஜமானது. என உணர்ந்தபோது ஜீரணிக்க முடியவில்லை.

அமரர் இரட்ணராஜா அவர்களின் வாழ்வும் அந்தோனியார் கல்லூரியின் வளர்ச்சியும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்தது. 1989ம் ஆண்டில் இருந்து இவருடன் பழகும் வாய்ப்பு கிட்டியது. அன்றிலிருந்து இன்றுவரை அவருடைய தொடர்புகள் இதம் தருபவையாக இருந்தன. 1990களில் ஆரம்பத்தில் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட இராணுவச் செயற்பாடுகள் எமது மண்ணை சின்னாபின்னப்படுத்தியபோது கல்வி நிலையங்களும் இடம் பெயரத் தொடங்கின.

அதிபர் அவர்கள் அப்போது அந்தோனியார் கல்லூரியின் அதிபராக இருந்ததுடன் ஊர்காவற்றுறை கொத்தணி அதிபராகவும் கடமையாற்றினார். கொத்தணிப் பாடசாலைகளை ஒருங்கிணைத்து சுருவில் தனியார் வீடுகளில் மாணவர்களுக்கு கல்வியை அளிப்பதில் பெரும்பங்காற்றினார். தொடரும் குண்டு வீச்சுகளுக்கு மத்தியிலும் மக்களோடும், மாணவர்களோடும், ஆசிரியர்களோடும், தானும் நின்று கல்விப் பணியைத் தொடர்ந்தார்.

1991ல் தீவகம் புலம்பெயர்ந்து தீவக கல்வி நிர்வாகங்களை தொடர்ந்து வளர்ப்பதற்கு பலர் உழைத்தார்கள். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அதிபர் இரட்ணராஜா அவர்கள் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் மாலை நேரப் பாடசாலை, யாழ். சென். ஜோன்ஸ் அக்கடமியில் ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலையின் செயற்பாடுகள், அரியாலை, நாவற்குழி, கெற்பலி, சாவகச்சேரி, கரவெட்டி என்று இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலெல்லாம் கோழி குஞ்சுகளைக் காப்பதுபோல பிள்ளைகளையும் ஆசிரியர் களையும் ஒன்றிணைத்து கல்விப் பயிர்வளர்த்த வரலாற்றினை கல்வி உலகம் இலகுவில் மறந்துவிடமுடியாது.

இடம் பெயர்நிலையில் நம்பிக்கையும், துணிச்சலும் இவருக்கு பலத்தைக் கொடுத்தது. இவரது தலைமையில் நடைபெற்ற "முத்தமிழ் விழா" தீவ[illegible] மாணவர்களின் நிதிக்கான கலை விழா, பிரியாவிடை வைபவங்கள் அத்தனையு[illegible] முன்னின்று எல்லோரையும் பிரமிக்க வைத்த பல நிகழ்ச்சிகளை இன்னமு[illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியவில்லை. எந்த இடத்திலும் நான் ஒரு அசல் "தீவான்" என்று நெஞ்சிலே தட்டி பெருமையாகப் பேசுகின்ற பிறந்த மண்ணை மிக ஆழமாக நேசித்த ஒரு கண்ணியமான கனவானாக இவரை நான் தரிசிக்க முடிந்தது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இவர் உயர்ந்து சென்றபோது நிர்வாகப் பதவிகள் பல இவரை தேடிவந்தபோது அவற்றையெல்லாம் பெரிதாக எண்ணாமல் அந்தோனியார் கல்லூரியை அதன் சொந்த மண்ணிலே கொண்டு சென்று மீளவும் சேர்ப்பது தனது இலட்சியமாக கொண்ட ஒரு இலட்சிய புருஷனாக இவரை நாம் பார்த்தோம். அதில் இவர் வெற்றியும் கண்டார். அவரின் இலட்சியம் நிறைவேறி அவருடைய கல்லூரி இன்று நிமிர்ந்து நிற்கிறது.

வாழ்க்கையில் வசதியும், வாய்ப்பும் தேடி ஓடி தமது பாரம்பரியங்களை இழந்து போலித்தனமாக வாழும் இன்றைய சமுதாயத்தில் இப்படியும் ஒரு மனிதனா? இப்படியும் ஒரு மண் பற்றா? நினைக்கவே பெருமையாக உள்ளது. 1996ல் மீள குடியேற்றம் நடந்த போது பிறந்த மண்ணுக்கு துணிச்சலுடன் சென்று தனது ஊரில் தனது வீட்டில் இறுதிவரை வாழ்ந்த ஒரு பெருமகனை நினைக்கும்போது பெருமை கொள்ளலாம். தனது ஊரில், தனது மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து கோயில், கல்லூரி புனரமைப்பு செய்து இறுதிரை உழைத்து அங்கேயே உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடையாக்கி உயர்ந்து நிற்கின்ற அமரர் இரட்ணராஜா அவர்கள் எமது சமுதாயத்தில் பலருக்கு பல செய்திகளை கூறிச் சென்றுள்ளார்கள்.

இவ்வாறான ஒரு கனவானுடன் வாழ்ந்த அந்த நாட்கள் மிக இனிமையானவை, இதமானவை. இன்று பலருக்கு இவரின் இந்த பன்முக பரிமானத்தன்மை தெரிந்திருக்க நியாயமில்லை. இவருடைய வாழ்க்கைச் செயற்பாடுகள் புதியவர்கள் பலருக்கு பல விடயங்களை தெரிவுபடுத்த வேண்டும். இவ்வாறானவர்கள் பிறந்து வாழ்ந்தமையால் தீவகம் பெருமை பெறுகிறது. தீவக கல்விப் பாரம்பரியத்தில் மாத்திரமன்றி தீவக சமூக, பொருளாதார, பண்பாடு, வரலாற்றில் அமரர் இரட்ணராஜா அவர்களின் வாழ்வியல் கோலங்கள் எம்மில் பலருக்கு பல விடயங்களை உணர்த்தியிருக்கிறது. இப்போதுள்ளவர்கள் இவர்களுடைய தியாக வாழ்வியலை மனங்கொள்ள வேண்டும்.

அமரரின் ஆத்துமா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறேன்.

சாந்தி சாந்தி சாந்தி

பொ. அருணகிரிநாதன்

அதிபர்

யாழ். சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி

மத்திய மகா வித்தியாலயம்

வேலணை

# A WELL RESPECTED AND DEDICATED PERSON

It was a sad and shocking news for us to hear the sudden demise of Mr. S. A. E. Ratnarajah, conveyed to the OSA of St.Anthony's College, Kayts, Canada branch, through the Rector of the College, Rev. Fr. Jesuthas.

It is with great grief and sympathy I extend my condolence to his wife and children and also to the principal, the staff and the students of St.Anthony's College, Kayts.

I have had the pleasure and privilege of enjoying the acquaintance of Mr.Ratnarajah who was a fellow student, a co-staff member and also a Principal. He took up responsibility as Principal of the school at a very crucial and challenging time and performed his duty boldly and well, following the footprints of the past predecessors bringing fame and honour to the institution, the staff and the students. As a well respected and dedicated person devoted to his calling as teacher and a principal he had them making their lives happy and peaceful.

It was a gratifying and enjoyable experience for Mr. Ratnarajah and many of his friends including me to have had the chance of meeting and conversing together after a long time, when he came to Canada two years back, to visit his daughter and family residing in Scarborough. It is sad that we miss him today.

We shall remember him in life always and pray that God may let His face to shine upon him and save him in His loving kindness. May the Lord also bless his family, friends and console and comfort them in His infinite goodness.

*T. S. Joseph* B.Sc, Dip.inEd.

(Retired Teacher)

99 John Tabor Trail
Scarborough, Ontario
M1B 2P6
Canada





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A HEARTFELT FAREWELL TRIBUTE TO MY HEADMASTER

"Ask not what the country can do for you but ask what you can do for your country" a quote from President Kennedy at his inaugural speech. It was with shock and sadness 1 learnt the untimely demise of my former Headmaster and a friend. It is appropriate to share my experiences and the precious memories of him at the publication of a tribute to this noble man. Although I was a student under him in my early days I got to know him better during my teaching career at St Anthony's College where he was the headmaster. His love and kindness was indelibly etched deep within me. He was a noble human being with a charming smile, pleasant and charismatic personality, and a person who was full of compassion and love for humanity. He was a good listener and always maintains a "cool temperament". He showed a great care to his fellow teachers and equally to the students and we were the wind beneath his wings. The three years of my teaching career was ever the happiest time in my life and it was due to his style of leadership and mutual respect for fellow teachers.

He treated everyone equal, breeching the cultural and social barriers. He was an embodiment of spirituality, Christian discipline, love and charity. The recent contributions of the development of the church and to the alma mater were the testimony to his love and respect to the community at large. Days gone, 1 still reminisce that a good man has gone. Such was the loss of our headmaster to many others especially to the grief wife and children. His life should be a model for those selfish minded people within our community to emulate to follow and adapt. His achievements and attainments never spoiled his benign and genial nature.

When I last met him in UK he was with great vision and ambition to develop the college and the church. He never relented from his goals and he contributed his time and effort until the last minute of his life for the betterment of the community. We all miss him very much. We lost a friend, a teacher and well-wisher and his simplicity guidance, advice and his love which are irrefutable and indelible from our heart.

A man lived to the fullest with the above quote. May he rest in peace.



*Athanas Bennie Jeyarajan.* U.K.
Former Teacher



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு செய்ய முடியாத இழப்பு

காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் உயர்திரு. S.A.E. இரத்தினராஜா அவர்களின் திடீர் மரணச் செய்தி எம் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியது. அதிபர் அவர்கள் இன, மத, வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு சமூகத் தொண்டர். தனது கொள்கைகளைச் செயல்வடிவில் காட்டிய செயல்வீரன். ஏழைகளின் தோழன், உத்தம கத்தோலிக்கன். சகலரையும் சமமாக மதிக்கும் பண்புடையவர். தனது வாழ்நாள் முழுவதையும், காவலூரினதும் புனித அந்தோனியார் கல்லூரியினதும் முன்னேற்றத்திற்கு அர்ப்பணித்த தியாகி.


யாழ் கத்தோலிக்க தனியார் பாடசாலை நிர்வாகம் தனியார் பாடசாலைகளைத் தொடர்ந்து இயக்க முடியாமல் அரசாங்கத்துக்கு அவற்றைக் கையளிக்க முற்பட்ட வேளையில், புனித அந்தோனியார் கல்லூரியைத் தொடர்ந்தும் தனியார் பாடசாலையாக நிர்வகிக்கக் கடும் முயற்சிகளை மேற்கொண்டார். இறுதியாக பாடசாலை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட பின்பும், கல்லூரியின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாத்தார்.

கல்லூரி ஆசிரியர்கள் அனைவரையும் ஒரே குடும்பமாக பராமரித்தார். அவர்கள் ஒவ்வொருவரினதும் இன்பத்திலும் துன்பத்திலும் இரண்டறச் கலந்து வந்தார். பல மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக அமைந்தார். அவரது வழிகாட்டலின் கீழ் வாழ்ந்த வாழ்க்கை என்றும் இனிமையானதே.

புனித அந்தோனியார் கல்லூரியில் க. பொ. த. உயர்தர வகுப்புக்களைத் தொடங்கி, பல இளம் ஆசிரியர்களை அமர்த்திக் காவலூருக்கு பெரும் கல்விப் பணிபுரிந்துள்ளார். அதிபர் திரு S.A.E. இரத்தினராஜா அவர்களின் இழப்பு ஈடு செய்யப்பட முடியாத ஒன்றே. அவரைப் போன்ற கருணை உள்ளங் கொண்ட கல்விமானைக் காவலூர் என்றும் கண்டதில்லை.

இவரது இழப்பினால் துயருறும் திருமதி இரத்தினராஜா ஆசிரியை அவர்களுக்கும் அவர்தம் பிள்ளைகளுக்கும், கனடாவில் இடம்பெயர்ந்து வாழும் சக ஆசிரியர்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிபரின் ஆன்மா சாந்தி அடைவதாக



அன்ரன் றெக்சி
முன்னாள் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HE WAS LORD'S WORK OF ART

Sometimes, God is quite remarkable,
you can see his artistic talent all around,
you can see the majesty in His work,
in every being, every happening, every sound.

And at times He excels himself,
and makes a dolphin or a bird of paradise,
or He creates someone with so much talents and vision,
that you'd never meet anyone who's even half as nice.

And that's how we think of Mr.Ratnarajah,
a soul, chock full of warmth, love and spirit,
he had a wonderful outlook on life,
love it, live it, but most of all, be in it.

Master was the best for many,
because his heart was bigger than his chest,
and we truly believe he loved everyone.
especially the pupil at St.Anthony's.

He always had a clear vision,
and it was always to hope for the best for SAC,
how we miss him, his smile, his enthusiasm,
his energy, his laughter and his diplomacy.

Master was optimistic about teams 'SAC,
and he always knew when a match was due,
he'd get so excited when he watched them,
they were always top, those boys in blue and gold.

And we know God was proud of His work,
and He too, didn't want to spend anymore time apart,
because beauty is always in the eye of the beholder,
and Mr. Ratnarajah was truly beautiful, God's work of art.

May his soul rest in eternal Peace!!



*Quintus Thuraisingham*
*For Late Mr. S.A.P. Thuraisingham*
(Mr. Ratnarajah's friend and colleague)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “உவப்பத்தலைக் கூடி...”


1939ம் ஆண்டு வைத்திய கலாநிதி வ. ஏகாம்பரம் அவர்களுடைய வீட்டுக்கு ஒரு குடும்பம் காரில் வந்தது. மருத்துவ சிகிச்சைக்கு வந்ததாகத் தெரியவில்லை. குழந்தை குட்டிகளெல்லாரும் மாம்பழ நிறத்தினராய், குதூகலமாயிருந்தனர். பிறகு அறிந்தேன் நீதி மன்ற சங்கிடுத்தார் சிங்கநாயகம் குடும்பத்தினர் என்று. நத்தார் தினம் போன்று கொண்டாட்டங்களுக்கு நாங்களும் அவரது 1ம்குறுக்குத்தெரு வீட்டுக்குப் போன ஞாபகம்.

1940ல் அவர்கள் தென்னிலங்கைக்கு உத்தியோக மாற்றலாகிச் சென்றுவிட்டனர். நான் 1944ல் புனித அந்தோனியார் கல்லூரிக்கு எட்டாம் தர மாணவனாகச் சென்றேன். அதற்கு முன் சிலகாலம் அன்ரன் இரட்ணராஜா கீழ்வகுப்பில் கற்று வெளியூர் சென்றதாக கேள்வி. 1952ல் நான் ஆசிரியனாகி, அங்கு கற்பிக்கத் தொடங்கினேன். பின்னர் இரத்தினராஜா இந்தியாவில் புகழ்பூத்த லோயலாக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்துகொண்டு இளம் ஆசிரியராய்ச் சேர்ந்தார்.

வைத்தியர் ஏகாம்பரம் ஒருநாள் அவர் தம் தாயாருக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் விவாகம் செய்யவேண்டும் என்று புத்தி சொன்ன நினைவு. அன்ரன் சிரித்துக்கொண்டு “மம்மி” சம்மதம் என்று சொல்லிவிட்டார். விவாகம் எங்கள் கோவிலில் நடக்கும் என்று சொன்னார். திருமணக் கொண்டாட்டத்திற்கு ஆசிரியர் குழாம் முழுவதும் சென்றிருந்தோம். புனித அந்தோனியார் கல்லூரியின் நூற்றாண்டு விழாவோடு இரத்தினராஜாவின் புகழ் உச்சியை அடைந்தது. நிர்வாகத் திறமை, மாணவர்களோடு மாணவராக நின்று கருமங்களை ஆற்றும் திறன் எல்லாரையும் கவர்ந்தது. இறுதி நாள் நிகழ்ச்சியில் தலைமை தாங்கிய யாழ் இந்துக்கல்லூரி அதிபர் ந. சபாரத்தினம் “யார் இந்த இளம் பையன்” “he seems to bo an asset to the college his future is assured” என்றார். வசிட்டர் வாயால் 'பிரம்மரிஷி' என்றதுபோல் ஆயிற்று. கல்லூரியின் முதலாவது பொதுநிலை அதிபர் (Lay Principal) உருவாகிக் கொண்டிருந்தார். சக ஆசிரியர்கள் “இரத்தினராஜாவுக்கு ஒரு குருமார் அங்கியைப் போட்டு, அவரையே அதிபராக்கி விடுவோமா?” என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

“குலத்தளவே ஆகும் குணம்”

“நட்பும் கொடையும் பிறவிக் குணம்” என்பது அன்றோர் வாக்கு. அவரது இப்பண்புகளுக்கு ஆயிரம் எடுத்துக் காட்டுகள் உண்டு. வண. பிதா ஜீவரத்தினம் காலத்தில் ஓர் இளம் ஆசிரியர் முறைத்து பாரத்து ஒரு மாணவனைத் தண்டித்தார். உறவினர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க ஏற்பாடு செய்தனர். ஆசிரியன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளோடும் அன்போடும் சேர்த்து தண்டனை வழங்கி, மாணவனை நல்வழிப்படுத்துவது அக்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கம். அதை மதியாமல், ஒரு முறட்டு உறவினன வழக்குக்கு போனபோது அதிபர் சுவாமிக்குப் பிடிக்கவில்லை. உறவினரிடம், ஆசிரியன் தண்டனை கொடுப்பது பிழை என்று உலகம் கருதும்படி நடக்கவேண்டாம்.. நீதிமன்றத்து வழக்கை "வாபஸ்" பெறும்படி புத்தி சொன்னார். அவர்கள் கேட்கவில்லை. எல்லை மீறிவிட்டது என உணர்ந்த அவர் இரத்தினராஜாவை அழைத்து "இயன்ற வழியை பாரும்" என்றார். யாழ்ப்பாணத்தில் நின்ற என்னைத் தேடி அவர் காரில் ஒரு கூட்டம் இளம் ஆசிரியர்கள் வந்தனர். 'சபா' உமது மைத்துனரைக் கண்டு, அவர் நன்பனான பல் வைத்தியர் என்ன மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கின்றார் என அறிய வேண்டும் வாரும் என்றார் இரத்தினராஜா. வைத்திய அறிக்கையில் அடிமெல்லிய தாய் இருந்தாலும், உள்ளே தெற்றுப் பல் இருந்தபடியால் காயம் ஏற்பட்டது என்பதை சுட்டிக்காட்டி, எழுதச் செய்து திரும்பினோம்.

வேலையை வெற்றிகரமாக முடித்தபின் எல்லாரும் களைப்புடன் 'சுபாஸ் கபே' க்குப் போய் தேநீர் பருகினோம். பாதிக்கப்பட்ட ஆசிரியர் காசு கொடுத்திருக்க வேண்டும் அவர் சற்று உலோபி. இரத்தினராஜா காருக்கு 'பெற்றோல்' இட்ட செலவுடன் தேனீர்ச் செலவையும் கொடுத்தார். "நட்பும் கொடையும் பிறவிக்குணம்"

"பண்பு உடையார் பட்டுண்டு உலகம்"

மற்றொரு நிகழ்ச்சி என் உள்ளத்தைவிட்டு அகலாதது. ஓர் அதிபருடைய செயற்பாடுகள் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததைச் சகல ஆசிரியர்களும் உணர்ந்தோம். நல்லாயரிடம் சென்று நிலையைச் சொன்னோம் இன்னுமொரு சந்தர்ப்பம் தரும்படி அதிபர் ஆசிரியர் கூட்டத்தில் தெரிவித்தார். ஆனால் ஓர் ஆசிரியராவது அதனை விரும்பவில்லை, என்றாலும் ஒருவருமே குருவானவருக்கு முன் பேசத் துணியவில்லை. இளம் இரத்தினராஜா எழுந்தார். மிகமிகப் பணிவான குரலில் வெறுப்போ, கஷ்டமோ இல்லாத உணர்வுடன் நாங்கள் ஏன் இந்த இறுதிக்கால கட்டமாக நல்லாயரிடம் சென்றோம் என்றதை வரிசைப்படுத்திக் கூறினார். இறுதியில் முழங்காலில் இருந்து, அதிபர் கல்லூர்ரி வளர்ச்சிக்காற்றிய சேவைகள் அனைத்துக்கும் நன்றிகூறி, அவரே கல்லூரி வீழ்ச்சிக்கு அத்திவாரம் இடக்கூடாது என்று தெரிவித்தார்.

'Father we implore you, to quit if the college is to prosper' என்று வேண்டினார். அவரது வேண்டுதல் பலன் அளித்தது. அதிபர் மாற்றம் நிகழ்ந்தது. "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" கல்லூரியில் உயர் வகுப்புகள் வைக்கப்பட்டன பல்கலைக்கழகத்திற்கு மாணவர் சென்றனர். அவர் கால நிர்வாகத்தில் என்னை சைவசமய பாட ஆசிரிய ஆலோசகர் ஆக்க வட்டாரக்கல்வி அதிகாரி யோசிக்கின்றார் என்று அறிந்தார். தொலைபேசி அழைப்பு வந்தபோது "சபா உம் வீட்டுநிலையில் நீர் ஊரூராக அலையமுடியாது; வேண்டாம் என்று சொல்லும்" என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு சரி எனப்பட்டது. எனக்கு சைவசமய பாடத்தில் சிறப்பு பட்டம் ஏதும் இல்லை என்று சொன்னேன். கல்வி அதிகாரி சரி என்றார். ஒரு சைவப் புலவர் சான்றிதழ் ஆசிரியர் அந்த இடத்துக்கு தெரிவானார்.. எனக்கு அயல் பாடசாலைக்கு மாற்றம் இட்டார்கள் கல்வி திணைக்களத்தார் முதல் வருடம் கேட்டபோது. நான் "33வருடம் சேவை செய்த எனது கல்லூரித் தாயிடம் வேலை பார்த்து ஓய்வு பெறுவேன் வேண்டாம" என மறுத்து விட்டேன். எனக்கு மாற்றல் கடிதம் வந்தபோதுதான் அவருக்கும் எனக்கும் மாற்றம் பற்றி தெரிந்தது. இருவருக்கும் நண்பர் கதிர்காமத்தம்பிதான் ஊரோடு போவதற்காக, இந்த மாற்றத்தை பா. உ. மூலம் செய்துவிட்டார்.

நான் இடம்மாறிய பின் கொத்தணி அதிபரான இரத்தினராஜா என்னை கொத்தணி உப அதிபராக்கினார். அவர் ஓய்வு பெற்றபோது, யாழ்ப்பாணம் பெரியகோவில் விழாவில் பங்கு பற்றினேன். அவர் குடும்பத்தின் சுகதுக்கங்கள் அனைத்திலும் பங்குபற்றி, எனது மைத்துனர் பரிகாரியார் போலவே அவரது குடும்ப நண்பராய்த் தொடர்ந்திருந்தேன். மனைவி, பிள்ளைகள் எல்லோரும் என்னைத் தம்முள் ஒருவராகவே பாவித்து வந்தனர். யாழ்ப்பாண சிங்கநாயகம் குடும்பத்து பெருமைகளை எல்லாம் தேடிக் கொடுத்தபோது மகிழ்ந்தனர்.

இறுதியாக, அவர் கல்லூரியையும் தம் மதத்தையும் நேசித்ததற்கு மேலாக, தம் குடும்பத்தை நேசித்தார். தாயைப் போற்றியது போலவே மனைவியின் தாயாரையும் மதித்தார் என்ற நினைவே என்னை ஈர்த்தது. மாமியார் ஆண் குழந்தை இல்லாதபடியால், தன் இரத்த உரித்து மகன் முறையானவரும் இறுதிக் கிரிகைக்கு வரமுடியாது எனக் கூறியபோது, "அப்போ எனக்கு இரவல் கொள்ளிதானா?" என்று வருத்தத் துடன் கூறினாராம். இரத்தினராஜாவின் காதில் இச்சொல் விழுந்துவிட்டது. மரணக்கிரிகையை ஆரம்பித்தபோது, பூநூலுடன் நின்றார். "மாமி தான் ஆண்பிள்ளை இல்லாதவள் என்ற சோகத்துடன் போகக்கூடாது" என்று விளக்கம் அளித்தார். அந்த அரும் செயல் யாராலும் செய்யமுடியாது. பிதிர்களின் ஆசீர்வாதம் அவரது பிள்ளைகளின் வாழ்வுக்கு மலர்ச்சி கொடுத்து வருகிறது.

"உவப்பத்தலை கூடி உள்ளப்பிரிதல் அனைத்தே புலவர் தொழில்"
மண்ணை நேசித்து வாழ்ந்த நல்லார் ஒருவர் இன்று நம் மத்தியில் இல்லை. கரம்பொன் வாழ்வில் ஏற்பட்ட வெற்றிடம் அப்படியே இருக்கும்.

ஆ. சபாரத்தினம்
முன்னாள் ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி
முன்னாள் அதிபர், சண்முகநாதன் மகா வித்தியாலயம்
கரம்பொன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONDOLENCES FROM A RETIRED TEACHER

Mr. S. A. E. Ratnarajah was a colleague with me and later assumed duties as the Principal of St.Antony's College, Kayts. As a principal, he moved to heaven and earth to have the school as a private institution.

He always worked for the upliftment of the students in the field of studies and sports.

He always won the admiration and love of the students.

Together with my wife and children, I extend to his wife and children my deepest sympathy.

***J.A.N.Ferdinand,*** B.Sc., Dip.in.Ed.

*Any man's death diminishes me, because I am involved in Mankind; And therefore never send to know for whom the bell tolls; it tolls for thee.*

**(John Donne)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE RATNARAJAH EPOCH
# AT
# ST. ANTHONY'S COLLEGE, KAYTS

Coming in the Line of Eminent Priests and Brothers who steered the Antonian Ship for a long time, Rev.Fr.B.Soosaipillai retired in 1976 after serving as Rector for a short spell of two years. Then there was a dramatic change in the history of St.Anthony's College, Kayts. From its inception the Heads of the school for more than a century had been either Reverend Brothers or Priests. His Lordship Bishop Deogupillai, the Patron and Manager of the College, made an unexpected appointment in choosing a layman to be the Principal of the College. And it was Mr. S. A. E. Ratnarajah who had been already on the tutorial staff of the College for twenty years.

Educated at St. Patrick's College, Jaffna, and graduated in Arts from Loyola College, Madras, he joined St. Anthony's College in 1957 as Graduate Teacher. His strength and capabilities became very evident in his involvement in the Passion play event conducted by Fr. F.J.Stanislaus OMI in 1968, and the Centenary celebrations organized by Fr. Benjamin Alfred OMI in 1972. Clearly establishing his image as an efficient teacher and an Administrator with organizational skills, he took over the office as Principal of the College in 1976 and a new era thereby started. In that year the parents made an appeal to his Lordship that girls also be admitted to the Advanced Level classes as they were finding it difficult to travel to Jaffna for their higher education. Thus after more than hundred years of being an entirely Boys' school, girls were admitted to the A/L classes for the first time and Lady teachers were also appointed to the school. The status quo of the school entirely changed.

With the finances of the Diocese of Jaffna being expended for spiritual activities and other ecclesiastical matters, the maintenance of the then five private schools became a heavy burden. Hence the Bishop of Jaffna decided to hand over the Private schools one by one to the state. On the 1st of February 1978, St. Anthony's College, was handed over to the state and it became a Director managed school prior to its vesting on the 1st of May 1979. The College was then upgraded as I AB school, the only school with that status in the Kayts A.G.A division. It was considered a popular school in the Islands Division.

With the introduction of the Cluster system, the Kayts Cluster was formed in 1986 with St. Anthony's College as the Core school of the cluster and the neighbouring ten schools as Cluster schools. The following schools came under the cluster:-

1. J/ Little Flower Girls M.V. Karampon
2. J/ Shanmuganathan M.V. Karampon
3. J/ St. Mary's Girls' School, Kayts
4. J/ Naranthanai R.C.M.V. Naranthanai
5. J/ Thambaaty G.T.M.S. Tambatti
6. J/ Ganesha Vidyasalai, Naranthanai
7. J/ Mellinchimunai R.C.T.M Mellinchimunai
8. J/ Sivagurunatha Vidyasalai, Karampon
9. J/ Kathiresanantha Vidyasalai, Parithiadaippu
10. J/ Kayts R.C.T.Boys' School.

Mr. Ratnarajah, as Principal of St. Anthony's College and as the Cluster Principal of the Kayts Cluster schools, enhanced the standard of education in all these schools in a very remarkable manner. He pooled all human resources and the facilities in his cluster for the best use of all the children. While functioning as Cluster Principal, he was promoted to Sri Lanka Educational Administrative Service (S.L.E.A.S.) Class II from 1.1. 1988 and was offered a higher office in the Education department. But he opted to remain as Principal of the College in order to guide the destiny of St. Anthony's College and the numerous children entrusted to his care.

In June 1990 with the outbreak of Civil War, the people of Kayts vacated the town; the school was closed, as it was closer to the Naval Base at Karainagar. On the 6th of August when Kayts Town was severely bombed by Air Force Bombers, a bomb fell on the school administrative block, which was entirely destroyed.

On the 22nd August when the Military operations started in Kayts, the people took shelter at St. Mary's Church, Suruvil. Till October 1990 all schools in the islands were closed. In November St. Anthony's College was re-opened at a private house at Suruvil with a handful of students and teachers. As Cluster Principal, Mr. Ratnarajah, in spite of many inadequacies and inconveniences, enabled all children in his cluster schools to continue their education under his care. He conducted combined classes in the morning and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

afternoon in that private house in small groups under temporary sheds and with whatever furniture that could be collected from other schools.

On the 26th of April 1991, when the Security Forces advanced to Saravanai, once again the people had to move from Suruvil to Jaffna town through Araaly sea at great risk. In Jaffna once again he gathered all the children of the Cluster Schools and organized classes for them in the afternoon at Jaffna Central College after their school sessions.

In spite of all the problems faced, St. Anthony's College indomitably kept marching forward; catering to the students as well as the students of the cluster Schools. In January 1992, with the goodwill of St. John's College management St. Anthony's moved into the premises of St. John's Academy, Jaffna and conducted full day classes for all the students of the Kayts cluster schools.

St. Anthony's College and its cluster schools won many prizes in competitions with the Jaffna schools; in Physical education, Maths and Science competitions, General Knowledge quiz competitions and various other tournaments.

Having remained perfectly faithful to his office and rendered yeoman services to the College, Mr. S.A.E.Ratnarajah relinquished his duties at the age of Sixty in May 1995. He steered the school on constant progression even though it had its darkest and trying period during his tenure of office as Principal. Of his forty years at St. Anthony's College, and nineteen years as its Principal, he achieved great success. The numerous past pupils who have gone through his guidance, are doing very well in their profession and they are a testimony to his achievement. In November 1995, when the army occupied Jaffna and the people were displaced from Jaffna, the school was shifted to Usan Ramanathan M.V. and he was a great source of strength and assistance to the school community even after his retirement.

Mr. Ratnarajah had been the livewire of St. Anthony's College for about four decades and had instilled the minds and guided the lives of hundreds of youth in the Islands. Such a man with great calibre and dep committment is no more. His demise has created a big void in the

Antonian community. We remember him with deep gratitude and thank the Lord for the gift of Mr. Ratnarajah to his people at the time of their dire need.

May the Lord reward him for his invaluable services among his people.



***Fr. M. Jero Selvanayagam***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**An Array of Antonian Architects**

# PRINCIPALS AND RECTORS OF ST. ANTONY'S COLLEGE KAYTS

| | |
|---|---|
| 1872 | Mr. A. Swanipillai |
| 1902 | Bro. K. Felix SSJ |
| 1917 | Bro. Pakianathan SSJ |
| 1921 | Bro.PeterSSJ |
| 1926 | Bro. Francis SSJ |
| 1931 | Bro. Aloysius SSJ |
| 1938 | Bro. Philip SSJ |
| 1939 | Rev. Fr. A. S. Joseph OMI |
| 1948 | Rev. Fr. William Jesuthasan OMI |
| 1949 | Rev. Fr. S. N. Arulnesan OMI |
| 1952 | Rev. Fr. J. A. Karunaharar |
| 1953 | Rev. Fr. P.J. Jeevaratnam OMI |
| 1960 | Rev. Fr. F. J. Stanislaus OMI |
| 1963 | Rev. Fr. M. J. Mariampilai |
| 1967 | Rev. Fr. F. J. Stanislaus OMI |
| 1970 | Rev. Fr. Benjamin Alfred OMI |
| 1973 | Rev. Fr. F. J. Stanislaus OMI |
| 1973 | Rev. Fr. B. Soosaipillai |
| 1976 | **Mr. S. A. E. Ratnarajah** |
| 1995 | Mr. K. Ratnasingam |
| 2000 | Rev. Fr. J. A. Jesuthas |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் இறுதிச் சடங்கின்போது அச்சிட்டு வெளியிடப்பட்ட அஞ்சலிகளின் தொகுப்பு


# சேவையின் மகுடம்

இருவிழிகள் சொரிந்த நீரில்
இதயம் நனைகிறது
உம் இழப்பு எம் நெஞ்சில்
புயலாய் கொதிக்கிறது – பணிகள்
பல புரிந்த பாதங்கள் – ஓய்ந்தனவோ
கரம்பொன் மண்ணின்று
கண்ணீரில் நனைந்ததுவே
சேவையின் மகுடம்
மண்ணில் சாய்ந்ததுவே
செயல்வீரன் ஒருவன் – மூச்சின்று
ஓய்ந்ததுவே
உன் இழப்பினால்
அழும் விழியின் நீர்த்துளியால்
அஞ்சலி செலுத்துகின்றோம்.

மெலிஞ்சிமுனை பங்கு மக்களின்
கண்ணீர் அஞ்சலி

# ஆசானாய் இருந்து வழிகாட்டியவர்

புனித அந்தோனியார் கல்லூரி
புதுப் பொலிவு பெறச் செய்து
புத்துணர்வூட்டி – தீவகத்திற்கு
புகழ் தேடித்தந்த புனித மகனே......!
உம்மால் உருவாக்கப்பட்டு
உம்மை நித்தம் சிரசில் கொண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவகை கொள்ளும் மாணவர் - நாம்
உம் செய்தி கேட்டு உறைந்து போனோமே......!

மக்களின் சேவைக்கு மாண்பான கருத்தை
மனமுவந்து எடுத்துரைத்த
மன்னவனே எப்போதும் - ஆசானாய்
மனதில் இருந்து வழிகாட்டுவீர்.........!!!

மாணவன்

**நடராசா மதனராசா**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

# விழிநீர் சொரிந்து

கரம்பொன் ஊா ஈந்த தவப்புதல்வா
புனித அந்தோனியார் கல்லூரியின்
அதிபராய் திகழ்ந்து
மாணவர்களுக்கும், மக்களுக்கும்
சேவைகள் பல புரிந்து நின்றீர்
புனித செபஸ்தியார் தேவாலயத்தின்
திருப்பணிச் சேவையில் அரும்பணி ஆற்றினீர்
நீவீர் இவ்வுலகை நீத்தீர் என்ற
செய்தி கேட்டு விழிநீர் சொரிந்து
எம் கண்ணீப் பூக்களை காணிக்கையாக்கி
அன்னாரது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்பதுடன்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்

**கரம்பொன் வாழ் மக்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலிகள்

காலத்தின் பிடியில் இருந்து யார்தான் விடுபடுவார். வாழ்வில் உங்கள் சாதனைகளை மறப்பார் யாருண்டு. உங்கள் குடும்பத்தின் சிறந்த கணவனாய், அன்புத் தந்தையாய், ஆசிரியராய், சிறந்த அதிபராய், பாசமிகு நண்பனாய், சிந்தனை செல்வராய், கலைஞராய், எம் ஊருக்கொல்லாம் பெருமை சேர்த்து எத்தனை எத்தனை கதாபாத்திரங்களாய் எம் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கின்ற உங்களின் நினைவலைகளை நாம் ஒரு போதும் மறக்கமுடியாது.


அன்போடு பேணி ஆதரவாய்ப் பழகி
எம்மையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ளும்
அன்பின் உறைவிடமே கதிரவன் போன்றவனே!
ஆண்டுகள் ஆயிரம் போனாலும்
எம் உயிருள்ளவரை எம்மனதில்
நீங்கள் அணையாத தீபம் ஐயா!

**பழைய மாணவர் சங்கம்**

புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை

# கண்ணீர் பூக்கள்

எமது சங்க முன்னாள் தலைவரான அமரர் S. A. E. இரட்ணராஜா அவர்களின் திடீர் மறைவினால் துயரிலாழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக சமர்ப்பித்து, அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.



உரிமையாளர், சாரதி, நடத்துனர், நேரக் கணிப்பாளர்.
தனியார் சிற்றூர்ச் சங்கம்.
ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயராது உழைத்தவர்

பிறப்பின் மகிமையை எடுத்துரைத்தாய் – ஐயா
பசித்தவர் முகம் ஏறெடுப்பாய்
கல்வி என்னும் செல்வத்தை – ஏற்றிட நீர்
அல்லும், பகலும், அயராது உழைத்தாய்
உம் இறப்பு என்றும் பொய்யே – ஐயா
என்றும் எம்மத்தியில் வாழ்கின்றீர்.

**பணிப்பாளர், பணியாளர்கள்**

ஊர் / ப. நோ. கூ. சங்கம்

# இதய ஓலம் இது........

இமயம் சரிந்து எம் இதயம் வெடித்தது
இரட்ண கிளி எம்மை விட்டுப் பிரிந்தது
பார்வையிலே சேவகனாய் பண்பிலே அதிபராய்
பார் போற்ற பணி பல புரிந்த பண்பாளன்
எங்குற்றாய் என ஏங்குகின்றோம்........
முப்பத்தெட்டு ஆண்டுகள் எம் கல்லூரி தனில்
முழு மனதுடன் ஆசிரியராய் அதிபராய் பணி பல புரிந்தவனே
எங்குற்றாய் என ஏங்குகின்றோம்.....
வசீகரத் தோற்றமும், வாளிப்பான உடலும்,
கம்பீரத் தோற்றமும், கனிவான பேச்சும்,
இவையெல்லாம் எங்குற்றது?
அதிபர், அதிபர் என்றழைக்க யார் உண்டு
அவனியிலே நாம் அழும் குரல் கேட்கலையா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகத் தாய் அழுகின்றாள், கல்லூரித் தாய் துடிக்கின்றாள்,
புகழ் பூத்த மைந்தனை பிரிந்த துயராலே............
நாலாறு நாளா? நான்கு சகாப்தமல்லவா
கல்லூரித் தாய் அவளை அரவணைத்து அறிவொளி பரப்பினாய்
இலங்கை கல்வி நிர்வாக சேவைதனில் சித்தியடைந்தும்
உயர் பதவி வேண்டாது கல்லூரி அன்னையை
காலமெல்லாம் காத்தவன் நீ
செபஸ்தியார் ஆலயத்தில் செய்த சேவைகள் பல
செகமெல்லாம் வாழும் மாணவர் உன் புகழ் உரைப்பர்
தேசத்தை நேசித்தவனே! அதனால் சுகம் துறந்து
ஊருக்காய் ஒட்டு மொத்தமாக உருகி ஒழிந்தவனே
சுகமான வாழ்வு பலர் காண நீ மட்டும்
கூண்டுக் கிளியாய் வாழ்ந்தவனே!
பார் போற்றும் பண்பாளனே இரட்ணராஜாவே!
எங்குற்றாய் எனத் தேடுகின்றோம் பதிலில்லை
விழி நீர் சிந்தி விம்மகின்றோம்
இப் பாரினில் உனையன்றி பண்பு நிறை பண்பாளர் யாருளர்!
மின்னாமல்... முழங்காமல்... இடியென வந்த செய்தி
நம்ப முடியவில்லை நானிலத்தில் உன் பிரிவை
நல்லாசிரியனாய் அதிபராய் கொத்தணி அதிபராய்
பதவிகள் பல பாரினில் புரிந்தவனே - எமையெல்லாம்
தவியாய் தவிக்கவிட்டு எங்குசென்றாய்!
வழி மேல் வழி வைத்த தேடுகின்றோம்
வார்த்தைகள் ஏதும் வரவில்லை
புண்ணியனே உன் பூதவுடல் அழிந்தாலும்
புகழ் உடல் அழியாதது சென்று வா.......
உன் வரவுக்காய் காத்திருக்கும்..........

புனித அந்தோனியார் கல்லூரிக் குடும்பம





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் இதயத்தில்...

கண்டவர்கள் ஏளனம் செய்த
கடல் சூழ்ந்த மண்ணை
கட்டியெழுப்ப வேண்டுமென்று
கங்கணம் கட்டி நின்று

புனித அந்தோனியார் கல்லூரி
புதுப் பொலிவு பெறச் செய்து
புத்துணர்வூட்டி - தீவகத்திற்கு
புகழ் தேடித் தந்த புனித மகனே.....

உம்மால் உருவாக்கப்பட்டு
உம்மை நித்தம் சிரசில் கொண்டு
உவகை கொள்ளும் மாணவர் - நாம்
உம் செய்தி கேட்டு உறைந்து போனோமே.......

மக்களின் சேவைக்கு மான்பான கருத்தை
மனமுவந்து எடுத்துரைத்த
மன்னவனே எப்போதும் - ஆசானாய்
மனதில் இருந்து வழிகாட்டுவீர்

மாணவன்
**நடராசா மதனராசா**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

St. Joseph's Catholic Press, 360, Main Street, 2003 Jaffna, Sri Lanka. TP: 021 222 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr. S.A.E. Ratnarajah played the role of St. Sebastian at Naatu Koothu (Folk Drama) - 1975 Karampon

*Printed at : St. Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka. T.P. 021 2222378*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org